பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 19 செவ்வாய்க்கிழமை (03-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:188

## முகாம் அமைப்பதை எதிர்த்து வல்வை மக்கள் நேற்று மறியல்

வடமராட்சி,ஜூன்3

வல்வை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இராணுவ முகாம் அமைக்கும் நடவடிக்கையை எதிர்த்து நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று அப்பகுதியில் மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர். முகாம் அமைக்கப்பட்டுவரும் வல்வெட்டித்துறை-தொண்டமானாறு பிரதான வீதியில் உள்ள காணிக்கு முன்பாக வீதியை மறித்து இப்போராட்டம் இடம்பெற்றது.

காலை 9.30மணிக்கு சிதம்பராக்கல்லூரி முன்பாகக் கூடிய மக்கள், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் ஊர்வலமாகச் சென்று மறியலில் ஈடுபட்டனர்.

முகாம் நிறுவப்படுவதற்கு எதிராக சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியபடி ஆண்களும், பெண்களும், மாணவர்களும் வீதியின் குறுக்கே அமர்ந்திருந்தனர்.

பொதுமக்கள் வீதியை மறித்து அமர்ந்திருந்ததால் அந்தப் பாதை ஊடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

மறியல் போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், 10.40மணியளவில் 524ஆவது பிரிக்கேட் தளபதி கேணல் ரத்னாயக்கவும் படையினரும் இரு வாகனங்களில் வந்து முகாமுக்குள் நுழைய முற்பட்டனர். ஆனால், மறியல் போரில் ஈடுபட்ட மக்கள் அவர்களை முகாமுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)



வல்வை சிதம்பராக் கல்லூரி மைதானம் அருகே புதிய படை முகாம் அமைக்கப்படுவதை எதிர்த்து நேற்று அப்பகுதியில் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் வீதியின் குறுக்கே அமர்ந்து மறியற்போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். *(படம் : கரவெட்டி செய்தியாளர்)*

### முந்திய யோசனைக்கு மேலும் விளக்கம்

# புலிகளுடன் நேரில் பேசி சமாளிக்க அரசு முயற்சி!

## அதற்கு வாய்ப்புக் கேட்டுப் பிரதமர் கடிதம்

கொழும்பு,ஜூன்3

**வடக்கு-கிழக்கு அபிவிருத்தி, புனரமைப்புக் கட்டமைப்புத் தொடர்பான தனது யோசனைகள் குறித்து மேலதிக விளக்கக் கடிதம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.**

**விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை உடனடியாக நடத்துவதன் மூலம் தற்போதைய முட்டுக்கட்டை நிலையைச் சமாளிக்க அவர் முயற்சிக்கின்றார்.**

**இந்த நோக்கத்தில் உடனடிப் பேச்சுக்கு ஏற்பாடு செய்யும்படி அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பையும் மற்றைய தரப்பான புலிகளையும் எழுத்து மூலம் கோரியிருக்கின்றார் பிரதமர்.**

வடக்கு - கிழக்கில் புனரமைப்பு, புனர் வாழ்வு மற்றும் அவசர மனிதாபிமானப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கு - தமது அதிக பங்களிப்புடன் கூடிய - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம் என புலிகள் வற்புறுத்தியிருந்தனர்.

அத்தகைய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலேயே ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றுவது குறித்துத் தாம் பரிசீலிக்க முடியும் எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் கோரிக்கைக்கு மாற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நாடுகளின் தூதுவர்கள் நாளை தமிழ்ச்செல்வனை சந்திப்பர்

கிளிநொச்சி,ஜூன்3

வன்னிக்கு நாளை வருகைதரும் மூன்று நாடுகளின் தூதர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாட இருக்கின்றனர்.

நெதர்லாந்து தூதர் சுபாஸ் பிணாங்கட், சுவிஸ் தூதர் போனாடியோனோ றெகல் சொனி, பிரிட்டிஷ் தூதர் ஸ்ரீவன் இவான்ஸ் ஆகிய மூவருமே வன்னி வருகின்றனர்.

விமான மூலம் யாழ்ப்பாணம் வரும் இவர்கள் மூவரும் வாகனம் மூலம் வன்னி சென்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவர்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்று அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் கோரிக்கை விடுத்து ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையைக் கடித வடிவத்தில் தூதர்கள் தமிழ்ச்செல்வனிடம் நேரடியாகக் கையளிப்பர் என்று தெரிகிறது.

(ம-3)

## வன்னிக்கு அரசுக் குழுவை அனுப்ப பிரதமர் திட்டம்!

கொழும்பு,ஜூன்3

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்துரையாடித் தீர்வு காணும் நோக்குடன் அரசுக் குழு ஒன்றை வன்னிக்கு அனுப்பயோசித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் இப்படிக் கூறியுள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் விளக்கக் கடிதம் புலிகளின் பரிசீலனையில்!

கொழும்பு,ஜூன்3

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, புனரமைப்புக் கட்டமைப்புத் தொடர்பான தனது யோசனைகள் குறித்து மேலதிக விளக்கக் கடிதம் ஒன்றை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அது தற்போது புலிகளின் பரிசீலனையில் உள்ளது.

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றும் விடயத்தில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையை நீக்கும் கடைசிநேர முயற்சியாக பிரதமரின் விளக்கக் கடிதம் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

அந்த முயற்சி பலிக்குமா என்பது இரண்டொரு நாள்களில் தெளிவாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனது யோசனை குறித்து பிரதமர் ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதம் போதிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுடன் ஜோசப் எம்.பி. நேற்று தொலைபேசியில் உரையாடல்

கொழும்பு,ஜூன்3

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று தொலைபேசி மூலம் கலந்துரையாடினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் அனுப்பிய யோசனைக்கும் ஆகப்பிந்தி அனுப்பியுள்ள கடிதத்துக்கும் இடையில் சிறு வித்தியாசமே உள்ளது; சிறு மாற்றங்களே செய்யப்பட்டுள்ளன என தமிழ்ச்செல்வன் கூறினார் என ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. குறிப்பிட்டார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடயத்தில் மிக இறுக்கமாக விடுதலைப் புலிகள் உள்ளனர் என்பதை தமிழ்ச்செல்வனுடன் நடத்திய கலந்துரையாடலில் உணர்ந்து கொண்டேன் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு முன்னரே ஜோசப் பரராஜசிங்கம் தமிழ்ச்செல்வனுடன் தொலைபேசியில் உரையாடினார்.(ம-3)

## வரதர் அணி உறுப்பினர் நேற்றிரவு சுட்டுக்கொலை!

### கிழக்கில் மற்றொரு சம்பவம்

கொழும்பு,ஜூன்3

திருகோணமலை நகரின் மையப் பகுதியிலுள்ள மடத்தடி என்ற இடத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்னிரவு 9.00மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிருபன் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

கடுக்காய்ச்சி வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்திலிருந்து மடத்தடியிலுள்ள தமது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே அவர் சுடப்பட்டதாகக் கூறப்பட்டது. இவரது சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

(ம-4)

## "காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையை திறக்க வேண்டும்"

யாழ்ப்பாணம்,ஜூன்3

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டியது அத்தியாவசியமானது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் தற்பொழுது தனியார் துறையினரால் மாதாந்தம் 40 ஆயிரம் சீமெந்து பக்கற்றுக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனாலும் இந்தத் தொகை தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடக்கு - கிழக்குக்கான புதிய நிர்வாகக் கட்டமைப்பில் புலிகளின் பெரும்பான்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது

## பாலாவுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் ரணில்

*திரு.அன்ரன் பாலசிங்கம்,*
*பேச்சுக் குழுத் தலைவர்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்,*
*தலைமைச் செயலகம், கிளிநொச்சி.*

பாலசிங்கம் அவர்களே!

நோர்வே அனுசரணையாளர் ஊடாக நான் தெரிவித்த யோசனைகள் தொடர்பாக உங்கள் அமைப்பின் தலைமையின் பதிலைத் தாங்கி வந்த 30.05.2003 திகதிய கடிதம் எனக்குக் கிடைக்கப்பெற்றது.

பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு தங்கள் அமைப்பு, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்துவருவதையும் சமாதான நடவடிக்கைகளில் நீங்கள் உளப்பூர்வமாகவும் தீவிர உறுதியோடும் ஈடுபட்டிருப்பதையும் நான் விதந்துரைக்கின்றேன். அத்தோடு, 'வன்செயல் போரையும் யுத்தத்தையும் கைவிட்டிருப்பதான' தனது நிலைப்பாட்டைப் புலிகள் மீள உறுதிப்படுத்தியிருப்பது குறித்து நான் மகிழ்வடைகின்றேன்.

அரசும் தன்னுடைய பங்களிப்பாக -

எங்களுடைய பொது இலக்கை எய்தக்கூடிய திசையை நோக்கி நடவடிக்கைகளை முன்னெடுக்கத்தக்கதான சூழ்நிலையை உருவாக்குவதில் முழு உறுதியாக இருக்கின்றது.

சமாதான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இதில், உதவி வழங்கும் சமூகமும் தனது பங்களிப்பை இதில் ஆற்றிவருகின்றது.

மேலும், இறுதித் தீர்வு இன்னமும் வர முன்னரும் கூட -

உலகில் இதை ஒத்த நிலைமைகளில் உள்ளது போன்ற நிலைவரத்துக்கு மாறாக -

வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்குக் குறிப்பிடத்தக்களவு பொருளுதவியை முதலீடு செய்வது பொருத்தமானது என உதவி வழங்கும் சமூகம் கருதியுள்ளது.

வடக்கு, கிழக்கின் புனரமைப்புக்குத் தேவையான மூலவளங்களைத் திரட்டிக்கொள்வதாயின்-

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டிய தேவை உள்ளது என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள். உத்தேச நிதி வழங்கும் நடைமுறையானது வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதி, என்ன தேவைக்கென வாக்குறுதி வழங்கி உறுதிப்படுத்தப்பட்டதோ அதற்கே பாவிக்கப்படும் என்பதை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும்.

முழு சமாதானச் செயற்பாடுகளையும் பாதுகாக்கும் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலின் சராம்சம் இது என்பது எங்கள் கருத்துக்குரியது.

நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு நான் எழுதிய மே 27 கடிதத்தில் (அதன் பிரதி உங்களுக்கும் கிடைக்கப்பெற்றது) குறிப்பிட்டபடி வடக்கு, கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக முன்வைக்கப்படும் புதிய கட்டமைப்பு பின்வரும் இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கவேண்டும்.

★ செயல்திறன் மிக்கதாக - வெளிப்படையானதாக - பொறுப்பு (கணக்கு) செல்லக்கூடியதாக இருக்கவேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் உள்ள சகல சமூகங்களினதும் நலனைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும்.

★ புலிகள் முக்கிய பங்களிப்பை வழங்கத்தக்கதாக இருக்கவேண்டும்.

★ இலங்கையின் சட்டங்களுடன் பிணக்குப்படுவதாக இருக்கக்கூடாது.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கான புதிய கட்டமைப்புத் தொடர்பான எமது நிலைப்பாட்டை இங்கு மீளக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலதிக விளக்கங்களை நோர்வே அணியால் தரக்கூடியதாக இருந்திருக்கும் என்பதே எங்கள் எண்ணமாக இருந்தது.

இந்தக் கட்டமைப்பின் உச்சியாக இருப்பது உயர்சபை (Apex Body). அது ஓர் இடைக்கால ஏற்பாடாகவும் அதன் இலக்குகளை நிறைவேற்றுவதற்காகத் தேவையான நிர்வாக அதிகாரங்களுடையதாகவும் அது கருதப்பட்டது. அது விஞ்சிய பங்கை ஆற்றும். வடக்கு, கிழக்கின் உடனடி மற்றும் மத்திய கால புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி வேலைகள் தொடர்பான உத்திசார் முடிவுகளை எடுப்பது அந்தக் கட்டமைப்பின் இணை நடவடிக்கையாக இருக்கும்.

உயர் சபையின் உள்ளடக்கமும் அளவும் தரப்புகளின் கலந்துரையாடக்குரிய விடயமாகும். ஆனால், உயர் சபையின் செயற்பாடுகளில் தமது பெரும்பான்மைக் குரலில் ஒலிக்கத்தக்கதாக அதில் புலிகள் பங்குபற்றுவது சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது. அதேசமயம் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் நலனை நடைமுறையில் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பான பொதுவான இணக்கப்பாடும் இதில் காணப்படவேண்டும்.

இடைநடுவில் இருக்கும் நிறுவனங்கள் உயர்சபைக்கு உதவியளிக்கும் கட்டமைப்புக்களாகவே அமையும் உயர்சபையின் விஞ்சிய பங்களிப்பை அவை பாதிக்கா. இந்த மட்டங்களிலும் புலிகளுக்கு செயல்திறன் மிக்க பங்குபற்றல் இருக்கும்.

நாங்கள் முன்வைத்துள்ள கட்டமைப்பை முழுவதுமாக - ஒன்றாக நோக்கினால் - வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் குறிப்பிட்ட இலக்குகளை அடைய அது முற்றாக வழிசெய்யும் என நாம் நம்புகின்றோம்.

அத்தோடு, இந்தத் திட்டத்தின் உள்ளடக்கம் குறித்து உங்களுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படுத்தப்படுமானால் இந்த உண்மைகள் உங்களுக்குத் தெளிவுபடுத்தப்படமுடியும் எனவும் நாம் நம்புகிறோம்.

இந்தத் திட்டத்தின் உள்ளடக்கமாக இருக்கும் சிக்கலான - புதுமையான - அடிப்படைப் பண்புகள் காரணமாக, இந்த , விடயத்தில் குறிப்பிடத்தக்க கலந்துரையாடல் மூலமே இணக்கநிலை உருவாவது நடைமுறைச்சாத்தியமாகும். கடிதப் பரிமாற்றம் மூலமான தொடர்பாடல் அதற்குப் போதுமானதல்ல என்றும் நாம் நம்புகின்றோம்.

இந்தக் காரணங்களினால்தான்-

எங்கள் இருதரப்புகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தாண்டி, நடவடிக்கைகளை முன்னெடுக்க -

அனுசரணையாளரின் ஊக்கமான பங்களிப்புடன் அத்தகைய சந்திப்பை மேற்கொள்ள நாம் வேண்டுகின்றோம்.

எனவே -

தேவைப்படுகின்ற எந்த விளக்கங்களையும் முன்வைக்கவும், தெளிவுபடுத்தவும் உங்கள் கருத்துக்களைப் புரிந்து கொள்ளவும் அரசுப் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் உரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும்படி நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுக்கு நான் கடிதம் வரைகின்றேன்.

இரு பிரதிநிதிகள் குழுக்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று பின்னர் ஒழுங்குபடுத்தப்படலாம்.

*வாழ்த்துக்களுடன்,*
*உங்கள் நேர்மையுள்ள,*
*ரணில் விக்கிரமசிங்க,*
*பிரதமர்.*

# மாபோலையில் படையினர் அட்டகாசம்! ஹோட்டல், கடைகள் மீது தாக்குதல்!!

வத்தளை, மாபோலையில் கடற்படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு மோதலொன்று ஏற்பட்டது. இம்மோதலில் சிலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

மாபோலையில் உள்ள ஹோட்டலொன்றில் தேநீர் அருந்துவதற்காகச் சென்ற கடற்படை வீரர்கள் மூவருக்கும் ஹோட்டலில் உணவு பரிமாறுபவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலில் முடிந்தது. சிவில் உடையில் இருந்த கடற்படை வீரர்கள் தாக்குதலுக்குள்ளாகினர்.

இதனைத் தொடர்ந்து முகாமுக்குத் திரும்பிய கடற்படை வீரர்கள், இருபதுக்கு மேற்பட்டோர் அடங்கிய குழுவுடன் வந்து அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர். குறிப்பிட்ட ஹோட்டலும் அருகில் உள்ள சில கடைகளும் தாக்கப்பட்டுள்ளன. இதனால் ஆத்திரமுற்ற அயலில் இருந்த பொது மக்கள் அங்கு திரண்டதால் நிலைமை மோசமடைந்தது. உடனடியாக அவ்விடத்துக்குச் சென்ற பொலீஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். நேற்று இரு பகுதியினரையும் சமரசம் செய்யும் கூட்டம் ஒன்று வத்தளை பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது. நேற்று முற்பகல் அப்பகுதியில் கூடிய பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றபோதிலும், பொலீஸார் அதனைத்தடுத்து விட்டனர்.

வத்தளை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு இளைஞர் நகரில் சடலமாக மீட்பு!

## நகைக் கடையில் வேலை செய்தவர்

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்.கஸ்தூரியார் வீதியில் வின்ஸர் தியேட்டர் சந்தியருகில் உள்ள நகைக்கடை ஒன்றின் பின்புறம் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. அங்கு அந்த இளைஞர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

மட்டக்களப்பு, ஏறாவூரைச் சேர்ந்த சபாரட்ணம் விஜயகோபால் (விச்சு- வயது20) என்ற இளைஞரே மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டவராவார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

மட்டக்களப்பு, ஏறாவூரைச் சேர்ந்த இந்த இளைஞர் கஸ்தூரியார் வீதியில் உள்ள தனியார் நகைக் கடை ஒன்றில் தொழில் புரிந்து வந்தார். அந்த நகைக் கடைக்குப் பின்புறமாகவுள்ள அறை ஒன்றிலேயே அவர் தங்கியிருந்தார்.

நேற்றுக் காலை அந்த நகைக் கடையில் தொழில் புரியும் வேறொருவர் கடையைத் திறக்க வந்தபோது விஜயகோபால் எதுவித அசைவும் அற்ற நிலையில் கடைக்குப் பின்னால் உள்ள அவரது அறையில் கிடந்துள்ளார்.

இதுகுறித்து அந்த நபர் கடையின் உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினார். உரிமையாளர் வந்து பார்த்தபோது அந்த இளைஞர் வாயால் நுரை தள்ளிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதுகுறித்து யாழ்.பொலீஸாருககு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்தை யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டார். சடலத்தை மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டார். பிற்பகல் 2 மணியளவில் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(ம-8-10-15-139)

# கோட்டை பாதுகாப்பு வலயத்தை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை

கொழும்பு,ஜூன்3

கொழும்பு கோட்டைப் பகுதியில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன்படி லோட்டஸ் வீதி, யோர்க் வதி, ஜனாதிபதி செயலகப் பிரதேசம் ஆகியவற்றை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளாக விஸ்தரிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

கோட்டைக் குற்றப் புலனாய்வுத் தலைமையகத்துக்கு முன்னால் வைத்துத் தென்மாகாண அமைச்சர் எம்.கேரஞ்சித் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்னும் ஒருசில தினங்களில் வர்த்தமானி மூலம் உயர் பாதுகாப்பு வலய விஸ்தரிப்பு அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இதற்கிடையே, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு விசேட கொமாண்டோ அணி ஒன்று பாதுகாப்பு வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே அவருக்கு விசேட பாதுகாப்பு பிரிவொன்று பாதுகாப்பு வழங்கி வருகிறது.

# கொலைகளின் சூத்திரதாரிகள் புலிகளால் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூன்3

அண்மைக்காலமாக யாழ்குடாநாட்டில் இடம்பெற்ற பல கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபர்கள் மீது விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி மற்றும் ஊர்காவற்றுறை போன்ற பகுதிகள் உட்பட பல இடங்களிலும் இடம்பெற்ற கொலை, கொள்ளை மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான விவரங்கள் தம்மால் தொடர்ந்தும் திரட்டப்பட்டு வருவதாகவும்-

அவர்கள் மீது மக்கள் அமைப்புகளின் உதவியுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமென்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது.(ம-9)

# தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு ஜனாதிபதிக்கு ஜெயராஜ் சவால்!

சுதந்திரக் கட்சியோடு தொடர்புடைய ஒரு பத்திரிகை தன்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் குறித்துத் தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எம்பி. ஜனாதிபதிக்கு சவால் விடுத்திருக்கிறார்.

கட்டான தொகுதி சு.க. அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கட்சிக் கூட்டம் ஒன்றில் இந்தச் சவாலை விடுத்தார். ஜனாதிபதியோ அல்லது கட்சியின் வேறு எவருமோ இந்த விவாதத்துக்கு முன்வரலாம் எனவும் அவர் சொன்னார்.

அக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

நீதிமன்றத்தில் தண்டிக்கப்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள் என்மீது சுமத்தப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமேயானால் எம்.பி. பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் உடனே விலகத்தயார்.

என்மீது பொய்க்குற்றச்சாட்டு சுமத்தும் சேறுவாரிப் பூசும் பத்திரிகைக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவிருக்கிறேன். என்மீது சேறுவாரிப்பூசும் அப்பத்திரிகையின் செயல் குறித்து கட்சி மௌனமாக இருப்பது ஒரு புதிராகும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# 909 தொண்டர் ஆசிரியர்களுக்கு இந்த வாரத்தில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

வடக்கு-கிழக்கில் 909 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அங்கீகாரக் கடிதத்தை பொதுச்சேவை ஆணைக் குழுவினால் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் ந.தியாகலிங்கம் 909 ஆசிரியர்களினதும் பெயர்ப்பட்டியலை பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் ரி.எம்.எம்.தென்னக்கோனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இவ்வார முடிவிற்குள் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்படுமென தாம் எதிர்பார்ப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் த.மகாசிவம் தெரிவித்தார்.


இந்த ஆசிரியர்கள் ஆசிரிய சேவை வகுப்பு 3 தரம்II இல் நியமிக்கப்படுவார்கள். இவர்களது மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 3 ஆயிரத்து 825 ஆகவும் மேலதிக வாழ்க்கைச் செலவுப் படியாக 2ஆயிரத்து 200 ரூபாவும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

முதல் பட்டியலிலுள்ள ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களில் எஞ்சிய 91 ஆசிரியர்களின் விவரம் முழுமையாக சமர்ப்பிக்கப்படவில்லையெனவும்-

இவர்கள் குறித்த விரைவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு ,வடக்குக் கிழக்கு மாகாண ஆணைக்குழுவை கோரியுள்ளது எனவும்-

அறிக்கை கிடைக்கப் பெற்றதும் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களும் வழங்கப்படுமெனவும் - த.மகாசிவம் தெரிவித்தார். (ம-9)

உன் உள்ளத்திலுள்ள ஒருவரை எவ்வளவு நேசிக்கின்றாயோ அதுபோன்று உன் சூழலையும் நீ நேசிக்கவேண்டும்
(மே 29முதல் ஜூன் 4வரை சூழல் விழிப்புணர்வு வாரம்)



இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெங்களூர் ஜெயநகர் வணிக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய பாடசாலைப்பை இது. 25 அடி உயரம் 9.5 அடி நீளம், 4.7 அடி அகலம் கொண்ட இந்தப் பையைத் தயாரிக்க 116 மீற்றர் துணி தேவைப்பட்டது. 14 தொழிலாளர்கள் ஒரு மாதத்தில் இப் பையை உருவாக்கியுள்ளனர். பெங்களூர் ஜெயநகரிலுள்ள தர்ஷன் நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது

# வளரும் நாடுகளுக்கு உதவாவிட்டால் தாராளமயமாக்கலுக்கு ஆதரவுகிட்டாது!

## ஜி 8 தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் எச்சரிக்கை

எவியான்,ஜுன்3

வளரும் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால், உலக வர்த்தகக் கொள்கைக்கு ஆதரவு திரட்டுவது கடினமாகிவிடும் இவ்வாறு வளர்ந்த நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்.

ஜி 8 நாடுகள் என்று அழைக்கப்படும் பணக்கார நாடுகளின் மாநாடு, பிரான்ஸ் நாட்டின் எவியான் நகரில் நேற்று ஆரம்பானது. இம்மாநாட்டுக்கு சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டுள்ள சில நாடுகளின் தலைவர்களும், முன்னேறிய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்ற கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே இந்தியப் பிரதமர் வளர்ந்த நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தகத் தடைகளை நீக்குவதாகவும், வளரும் நாடுகளின் பொருள்களை வாங்குவோம் என்றும் கூறிய உறுதிமொழிகளை வளர்ந்த நாடுகள் நிறைவேற்றவில்லை. இந்நிலையில் வர்த்தகத்தில் தாராளமயத்தை மேலும் அதிகரிக்க அரசியல் ஆதரவைப் பெறுவது வளரும் நாடுகளுக்குக் கடினமாக இருக்கும்.

உலகளாவிய வர்த்தகக் கொள்கையால் அனைத்து நாடுகளும் வளர்ச்சி அடையும் என்று கூறப்பட்டது. ஆனால், இந்தக் கொள்கையை



ஏற்றுக்கொண்டு வளரும் நாடுகள் ஏமாற்றமடைந்துள்ளன. உலக நாடுகளின் வளர்ச்சிக்காக ஒரு நிதியத்தை ஏற்படுத்த வேண்டும். வளரும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு வளர்ந்த நாடுகள் வரி விதிக்கக் கூடாது. சர்வதேச முதலீட்டில் சிறு பகுதியை, உலக நாடுகளின் மேம்பாட்டுக்காக ஒதுக்க வேண்டும்.

இத்திட்டத்தை செயற்படுத்துவது கடினம் என்று கூறப்படுகிறது. ஆனால், இதனால் ஏற்படும் பயன்கள் அதிகமாக இருக்கும். இதை செயற்படுத்த சிறப்பான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

உலக வர்த்தக ஆளுகையின் கீழ், வளரும் நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன. விவசாயப் பொருள்கள் ஏற்றுமதிக்கு உள்ள தடையை நீக்க வேண்டும். மருந்துப் பொருள்கள் ஏற்றுமதிக்கு தாராள அனுமதி தர வேண்டும் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை அளிக்க, சர்வதேச நிதியுதவி வசதியை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரிட்டனின் திட்டத்தை தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். வறுமை ஒழிப்புக்கும், பொருளாதார வளர்ச்சிகளும் தேவையான நிதியை, வளரும் நாடுகள் தங்கள் சொந்த சேமிப்பின் மூலம் திரட்ட முடியாது. வெளிநாடுகளின் உதவி தேவை. மிகவும் ஏழை நாடுகளின் கடன்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும்.

வளரும் நாடுகளின் இயற்கை வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வளர்ந்த நாடுகள் அதற்கு ஈடான தொகையைக் கட்டணமாகத் தர வேண்டும். பரம்பரையாகப் பின்பற்றப்படும் அறிவு வளம், மதிப்பு மிக்க அறிவு வளமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்தகைய அறிவு வளத்தைப் பாதுகாக்க, அதை வர்த்தகத்துக்குப் பயன்படுத்துவோரிடம் இருந்து இழப்பீட்டை வளரும் நாடுகள் பெற வழிவகை செய்ய வேண்டும்' என்றார் வாஜ்பாய்.

அமெரிக்க அதிபர் புஷ் உட்பட வளர்ந்த நாடுகளின் தலைவர்கள், வாஜ்பாயின் பேச்சை மிகுந்த கவனத்துடன் கேட்டனர்.



ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் பிலிப் நிட்சிகி என்பவர் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். தற்கொலைக் கருவிதான் அது. தீராத நோய் காரணமாக தற்கொலை செய்துகொள்பவர்கள் துடிக்காமல், உடலில் சேதம் எதுவும் இன்றி மிக எளிதில் இந்தக் கருவியை பயன்படுத்தி உயிரைப் போக்கிக்கொள்ள முடியுமாம். சிட்னியில் நடந்த ஒரு மாநாட்டில் இந்த கருவி பற்றி செய்முறை விளக்கம் அளிக்கிறார் டாக்டர் பிலிப். இதன் விலை 6500 டொலர்கள்

# துணைப் பொதுச்செயலாளராக தி.மு.கவில் ஸ்டாலின் நியமனம்

## கருணாநிதி அறிவிப்பு



தமிழகத்தில் தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளராக கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் தி.மு.கவின் முதற்கட்டத் தலைவர்களில் ஒருவராக மு.க.ஸ்டாலின் உயர்ந்துள்ளார்.

தி.மு.கவின் தலைமைக்காரியாலயமான அண்ணா அறிவாலயத்தில் அக்கட்சியின் பொதுக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் கட்சித் தலைவராக மு.கருணாநிதி ஏகமனதாக தேர்தெடுக்கப்பட்டார்.

பின்னர் கருணாநிதி உரையாற்றுகையில் மு.க. ஸ்டாலினை கழகத் துணைப் பொதுச் செயலாளராக அறிவித்தார். இதே பதவிக்கு மேலதிகமாக வேறு இருவரையும் கருணாநிதி அறிவித்தார். அந்த இருவரும் மு.க.ஸ்டாலினின் நெருங்கிய நண்பர்கள் ஆவர். இதுவரை காலமும் தி.மு.க. இளைஞர் அணியின் தலைவராக மு.க.ஸ்டாலின் பணியாற்றினார்.

தி.மு.கவிலிருந்து வெளியேறும் முன்னர் தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளராக வைகோ பணியாற்றியமையும் -

மு.க.ஸ்டாலினின் அரசியல் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே தி.மு.கவை விட்டு வைகோ வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படுவதும் -

குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# முன்னாள் அதிபரிடம் விசாரணை

பெரு நாட்டின் முன்னாள் அதிபர் ஆல்பர்ட்டோ பிஜுமோரி இப்போது ஜப்பானுக்குத் தப்பி ஓடி அங்கு தஞ்சம் புகுந்திருக்கிறார்.

அவர் பதவியில் இருந்த காலத்தில் இடதுசாரிக் கட்சி எதிர்ப்பாளர்கள் பலரை இராணுவத்தினரை வைத்து கொன்று குவித்ததாகவும், ஊழலில் ஈடுபட்டதாகவும் கோடிக் கணக்கில் சொத்து சேர்த்ததாகவும் முறைப்பாடுகள் கூறப்பட்டன.

இதுதொடர்பாக ஜப்பானியப் பொலீஸார் பிஜுமோரியை அழைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்

விசாரணையில் இவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருந்தால் அவர் பெரு நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படுவார்

# பக்தாத் வரும் விமானங்கள் மீது சதாம் ஆதரவாளர்கள் தாக்குதல்!

பக்தாத்,ஜுன்3

ஈராக் நாட்டிலுள்ள விமான நிலையங்களில் குறிப்பாக பக்தாத் விமான நிலையத்தில் தரையிறங்கும் தங்கள் விமானங்கள் மீது அடிக்கடி துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதாக கூட்டணிப் படைகள் தெரிவித்துள்ளன.

மனிதாபிமான உதவிப் பொருள்களுடன் ஈராக் நாட்டில் உள்ள பக்தாத், மொசூல், டிக்ரித் விமான நிலையங்களில் வந்திறங்கும் விமானங்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடைபெறுகிறது என்று பக்தாத் வானொலி அறிவித்தது.

இச்சம்பவத்திற்கு சதாமின் ஆதரவாளர்களே காரணம் என்றும் -

ஈராக் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை சீர்குலைப்பதே அவர்களது நோக்கம் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதன்காரணமாகத் தான் பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் வர்த்தக விமானங்கள் இறங்குவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்றும் பக்தாத் வானொலி தெரிவித்தது.

# ராஜஸ்தான் ராணுவக் கிடங்கில் தீ

ஜெய்ப்பூர்,ஜுன்3

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இராணுவ ஆயுதக்கிடங்கில் தீப்பிடித்து அங்கிருந்த பெருமளவு வெடிபொருள்கள் நாசமடைந்தன. ஜெய்சால்மருக்கு அருகேயுள்ள குந்தா ராணுவ வெடிபொருள் கிடங்கில் இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது.

ஏராளமான வெடிபொருள்களும் எல்லைப் பகுதியிருந்து அண்மையில் அகற்றப்பட்ட கண்ணிவெடிகளும் அந்தக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கிடங்கைச் சுற்றி மின்வேலி அமைக்கப்பட்டிருந்தது.

எதிர்பாராதவிதமாக கிடங்கில் தீப்பிடித்ததும் வெடிபொருள்கள் வெடித்துச் சிதறின. தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ராஜஸ்தானில் உள்ள இராணுவ வெடிபொருள் கிடங்குகளில் கடந்த 2 ஆண்டுகளில் இத்துடன் மூன்றாவது முறையாக தீவிபத்து நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மாளிகையில் வாழ்ந்த சதாமின் மகள்கள் மின்சாரமற்ற வாடகை வீட்டில் அவதி!

கெய்ரோ,ஜுன்3

ஈராக் நாட்டில் ஏகபோக உரிமையுடன் சதாம் ஹுசைன் ஆட்சி நடத்தி வந்தார். பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறி அவரது ஆட்சியை போர் மூலம் அமெரிக்கா முடிவுக்கு கொண்டுவந்தது.

அமெரிக்காவை எதிர்த்துப் போரிட முடியாத சதாம் தப்பி ஓடினார். அவர் எங்கு பதுங்கி இருக்கிறார் என்பது மர்மமாக உள்ளது. அவரது 2 மகன்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

போர் தொடங்குவதற்கு முன்பே சதாம் தனது மனைவிகள் மற்றும் மகள்கள், பேரக் குழந்தைகளை அண்டை நாடுகளுக்கு அனுப்பி விட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், சதாமின் மகள்கள் ரகத், ரனா ஆகிய இருவரும் இப்போதும் ஈராக் தலைநகர் பக்தாத்தில் வசித்து வருகின்றமை தெரிய வந்துள்ளது.

சதாமுக்கு மொத்தம் 3 மகள்கள் அதில் ஒரு மகள் சதாமுடன் தலைமறைவாகி விட்டார். மற்ற இருவரும் ஏனோ தப்ப முடியாமல் பக்தாத்திலேயே இருந்து விட்டனர்.

ரகத், ரனா என்ற அந்த இருவருக்கும் மொத்தம் 9 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் இருவரும் அண்ணன் தம்பிகளான உசேன் கமீல், சதாம் கமீல்லை மணந்திருந்தனர்.

சதாமின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்த அவர்கள் 1995 இல் ஜோர்டானுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்தனர். ஆனால், ஈராக் பற்றிய தகவல்களை அவர்கள் மேற்கத்திய நாடுகளுக்கு சொல்வதாகச் சந்தேகிக்கப்பட்ட சதாம், அவர்கள் இருவரையும் படுகொலை செய்தார்.

அதன்பிறகு ரகத், ரனாவின் வாழ்க்கை கண்ணீர் கலந்ததாக மாறியது.

பெற்ற மகள்களையே விதவைகளாக்கிய சதாம், அவர்கள் வாழ்வதற்காக பக்தாத்தில் தனித்தனி அரண்மனைகள் கொடுத்திருந்தார். அத்தோடு கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர ஏராளமான பணியாள்களையும் நியமித்திருந்தார்.

ஆனால், அமெரிக்கா நடத்திய போர் அவர்களை மீண்டும் கண்ணீர் கடலுக்குள் ஆழ்த்தி இருக்கிறது. அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது ரகத், ரனா இருவரும் 9 குழந்தைகளுடன் அரண்மனையில் இருந்து விரட்டப்பட்டனர். சதாமின் நம்பிக்கைக்குரிய ஒருவர் வீட்டில் அவர்கள் தஞ்சம் புகுந்தனர். சதாமின் உறவினர் அல்மஜீத் அவர்களை பராமரித்து வந்தார்.

தற்போது ரகத், ரனா இருவரும் பக்தாத் நகரில் உள்ள ஒரு சிறு வீட்டில் மாத வாடகைக்கு வசித்து வருகின்றனர். இதை எகிப்தில் இருந்து வெளிவரும் 'அசர்க்அல் அவ்சத்' என்னும் அரபு நாளிதழ் ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது.

கஷ்டம் என்றால் என்ன என்பதை அறியாமல் வளர்ந்த ரகத், ரனா, இருவரும் இப்போது பணம் இல்லாமல் தவிக்கின்றனர். தங்கள் துணிகளை தாங்களே துவைத்துக் கொள்கின்றனர்.

அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்த அவர்கள் ஒரு வேளை சாப்பாடுதான் சாப்பிடுகின்றனர். அதையும் அவர்களே சிக்கனமாகச் சமைத்துக் கொள்கின்றனர்.

அவர்கள் வசிக்கும் வாடகை வீட்டில் மின்சாரம் இல்லை. குளிரூட்டப்பட்ட அறையில் வாழ்ந்த அவர்களுக்கு இது பெரும் அவதியைக் கொடுத்துளளது.

எப்போதும் அவர்கள் கண்ணீர் மல்கக் காட்சி அளிப்பதாக அல்மஜீத் கூறியுள்ளார். 9 குழந்தைகளுடன் அவர்கள் மனக்குமுறலுடன் வாழ்ந்து வருவதாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் உல்லாச வாழ்வின் உச்சக்கட்டத்தில் இருந்த அவர்களை பக்தாத் மக்கள் பிரமிப்புடன் பார்த்து ஆச்சரியப்பட்டனர். அதே மக்கள் இன்று அவர்களை பரிதாபத்துடன் பார்க்கின்றனர். (ஒ)

# இனப் படுகொலைகள் கொங்கோவில் அதிகரிப்பு

கின்சாசா,ஜுன்3

ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இனப் படுகொலைகள் மிக மோசமாக அதிகரித்துள்ளன. லென் டு மற்றும் ஹேமா ஆகிய இரு இனத்தவரிடையே காலம் காலமாக நிலவி வரும் பகைமை இனக்கலவரமாக வெடித்துள்ளது.

இந்த இரு இனங்களிலும் ஆயுதக்குழுக்கள் உள்ளன. இக்குழுவினர் பரஸ்பரம் மாற்று இனத்தவரைக் கொன்று குவித்து வருகின்றனர்.

இங்கு நிலைகொண்டிருந்த உகண்டா அமைதிப்படையினர் கடந்த மாதம் வெளியேறியதையடுத்து இன மோதல் உச்சக்கட்டத்தையடைந்துள்ளது.

இம்மோதலில் கியோம்னா கிராமத்தில் ஹேமா இனத்தைச் சேர்ந்த சுமார் நூறு பேர் ஒரே சமயத்தில் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளதாக உகண்டா இராணுவத் தளபதி பிரிகேடியர் கலே கைகுரா தெரிவித்தார்.

இதேவேளை, மற்றொரு கிராமத்தில் ஹேமா இனத்தவர் 250பேர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டதாக உள்ளூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் 20 குழந்தைகளும் அடங்குவர். மருத்துவனை ஒன்றுக்குள் புகுந்த கும்பல் கண்ணில் பட்டவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்துள்ளது. (ஒ)

### வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும்

# 'நியாப்' திட்டப் பணிகளை உலக வங்கிக்குழு மதிப்பிடும்

## அதிகாரிகள் இன்று யாழ். வருவர்

கோண்டாவில்,ஜூன்3

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 'நியாப்' திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை மதிப்பீடு செய்வதற்கென உலக வங்கி பிரதிநிதிகள் அடங்கிய இரண்டு குழுக்கள் மாகாணத்திலுள்ள பல்வேறு மையக் கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் மேற்கொள்ளவுள்ளன.

நேற்று திங்கட்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு குழுக்களும் இணைந்து இன ஆய்வுகளை மேற்கொண்டன. கல்மெட்டியாவ, இலுப்பைக்குளம் ஆகிய இரு மையக் கிராமங்களுக்கும் இக்குழுக்கள் நேரில் விஜயம் செய்தன.

இன்று செவ்வாய்க்கிழமை ஒரு குழு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அம்பகாமம், ஒலுமடு ஆகிய மையக் கிராமங்களுக்கு விஜயம் செய்ய, இரண்டாவது குழு மன்னார் மாவட்டத்திலுள்ள பெரியகுளம், புதுக்குளம் மையக் கிராமங்களைப் பார்வையிடும்.

இன்று யாழ்வரும் ஒரு குழு மறுநாள் புதன்கிழமை காரைநகர் வடக்கு, இருபாலை தெற்கு ஆகிய மையக் கிராமங்களுக்கு விஜயம் செய்ய, அடுத்த குழு வவுனியா மாவட்டத்திலுள்ள மரை இலுப்பை மகாமயிலன்குளம் ஆகிய மையக் கிராமங்களுக்கு விஜயம் செய்யும்.

ஐந்தாம் திகதி வியாழக்கிழமை ஒரு குழு மதவாச்சி, ஒலுவெவ மையக் கிராமங்களுக்கும், அடுத்த குழு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் மையக் கிராமங்களுக்கும் விஜயம் செய்யும்.

இந்த இரண்டு குழுக்களும் ஆறாம திகதி வெள்ளிக்கிழமை அநுராதபுரம் 'கில்வே மிரிதிய லொஜ்ஜில்' இடம்பெறவுள்ள திட்ட மீளாய்வுப்பட்டறையில் கலந்துகொள்ளவுள்ளன. இந்த மீளாய்வுப் பட்டறை வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். இரங்கராஜா தலைமையில் நடைபெறும்.

(எ-49)

### சைவசமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்3

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு அகில இலங்கை இந்துமாமன்றம், கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், தில்லையம்பதி அறநெறிப் பாடசாலை ஆகியன இணைந்து பாலர் வகுப்புத் தொடக்கம் தரம் 11 வரை உள்ள மாணவர்களுக்கு சைவ சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளனர்.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு முன்னர் மத்திய கிராம முன்னேற்றச் சங்க செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

போட்டிப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மத்திய கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மண்ணில் 13 - 04 - 1940



விண்ணில் 04 - 05 - 2003

### திருமதி சரஸ்வதி செல்லத்துரை

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (03-06-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி. (18684) - குடும்பத்தினர்.



## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான 6 மாதகால டிப்ளோமா பயிற்சி நெறி

★கேக் ஐசிங் ★பூ வேலை
★உணவு தயாரித்தல் ★கைவேலை
★உடை தயாரித்தல் ★FABRIC PAINTING
★கூந்தல் அலங்காரமும், முக ஒப்பனையும்.

☆ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
☆ புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கிழமைநாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்பில் மேலும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

மேலும் விவரங்களை தினமும் பிற்பகல் 2 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(C/28209) இயக்குநர்.


## மரண அறிவித்தல்கள்

### சபாபதிப்பிள்ளை தங்கராசா பத்தர்

(உரிமையாளர், தங்கராசா நகை மாளிகை,
யாழ்.கன்னாதிட்டி, உடுப்பிட்டி)

உடுப்பிட்டி, சந்தை வீதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை தங்கராசாப் பத்தர் நேற்று (02.06.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.* (18686)

தகவல்:
**பிள்ளைகள்.**

### செல்வி சோபியா சித்தானந்தன்

(நயினாதீவு)

நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் K.K.நகர், சென்னை 78, தமிழ் நாட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோபியா சித்தானந்தன் 01.06.2003 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமாகிவிட்டார்.

அன்னார் க.சித்தானந்தன் (வர்த்தகர், துஸ்யா றேடேர்ஸ் 193, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு - 11), வாசுகி தம்பதிகளின் சிரேஷ்ட அன்பு மகளும் சுலக்சனா (மாணவி-சென்னை), சுகன்யா (மாணவி - சென்னை), துஸ்யா (மாணவி-சென்னை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மு.க.கனகரெத்தினம் (வர்த்தகர்), காலஞ்சென்ற திருமதி பாலாம்பிகை மற்றும் கா.சு.பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற நாகமுத்து (ஓய்வுபெற்ற அதிபர், அனலைதீவு) மற்றும் நாகரெத்தினம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திருமதி கேசவராணி - சிவானந்தன், சிவகாந்தன் ஆகியோரின் மருமகளும் பரமானந்தன் - ஜெயஸ்ரீ (கனடா), தேவானந்தன் - வாசுகி (கொழும்பு), சர்வானந்தன் - நளாயினி (லண்டன்), தயானந்தன் - ரஜனி (லண்டன்), கிருபானந்தன் - முகுந்தினி (கனடா), சுரேசன் குமுதினி, தேவகி ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (02-06-2003) திங்கட்கிழமை சென்னையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் K.K.நகர், சென்னை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.198/10, திருவள்ளுவர்சாலை,**
**அரசடி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.** (18690)

தகவல்:
மு.க.கனகரெத்தினம்
(பேரன்).




உ
சிவமயம்





## வதிரி உல்லியனொல்லை

# அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

## சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா மனம் தரும்
தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

மெய்யடியார்களே!

சிவபூமியெனவும் தென் கைலாயம் எனவும் சிறப்பித்துக் கூறப்படும் ஈழத்திருநாட்டின் பெரும் பதியாக விளங்குவது யாழ்ப்பாணம். இப்பெரும் பதியில் நீர்வளமும் நிலவளமும் நன்மக்கள் சூழ்ந்தும் விளங்குகின்ற வதிரியில் எழுந்தருளி நல்லாட்சி புரிந்தருளும் உல்லியனொல்லை கண்ணகை அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளான விநாயகர், முருகன், வைரவர் மற்றும் நவக்கிரகங்களுக்கும் நிகழும் மங்களகரமான சுபானுவருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் (05-06-2003) வியாழக்கிழமை பஞ்சமித் திதியும் பூசநட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம்.

பிரதம குரு :
ஆகம கிரியாஜோதி சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள்
(அரசடிப்பிள்ளையார் ஆலயம் நாயன்மார்கட்டு)
தலைமையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

01-06-2003 ஞாயிற்றுக்கிழமை முதலாக நடைபெற்றுவரும் கிரியைகளைத் தொடர்ந்து 04-06-2003 புதன்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 3.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

05-06-2003 வியாழக்கிழமை நிகழும் மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 43 நாள்களுக்கு மண்டலாபிஷேகமும் இறுதி நாளன்று 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

அடியார்கள் ஆசாரசீலர்களாக கலந்துகொண்டு திருத்தொண்டுகள் புரிந்து அம்பாளின் அருள் பெற்று உய்வீர்களாக.

(18688) - ஆலய பரிபாலன சபையினர்.

# உதயன்

## தீர்க்கமாக ஒலிக்கும் தீனக்குரல் இது!

"நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்!"

- இவ்வாறு யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள இராணுவத்தினரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது யாழ்.பல்கலைக்கழக சமூகம்.

இவ்விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக சமூகம் வெளியிட்ட அறிக்கை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினரின் மனதை மட்டுமல்லாது, அந்த அறிக்கையை வாசிக்கும் ஒவ்வொருவரினதும் மனதையும் தொடுவதாக அமைந்திருக்கின்றது.

அமைதி வழியில் - சமாதான முறையில் - சமரசம் செய்து கொண்டு, அதேவேளையில் சம உரிமைகளோடு வாழத் துடிக்கும் அந்த நெஞ்சங்களின் தீனக்குரல் தெளிவாக - அதேசமயம் தீர்க்கமான உறுதியுடன் - அந்த அறிக்கையில் ஒலிப்பதை உணர முடிகின்றது.

*"இப்போது போவோம், அப்போது போவோம் என்ற எமது நம்பிக்கையெல்லாம் கரைந்து, இனி எப்போதும் எங்கள் வீடுகளுக்குப் போகமாட்டோம் என்ற அவநம்பிக்கை மனதைக் காரிருள் போல் கவியத் தொடங்கிவிட்டது.*

*"அதிகாலையில் எழுந்து முற்றத்துக்கு வந்தால் முகத்திற்கு நேரே இன்னும் நீட்டிய துப்பாக்கிக் குழல்களும் கரும்பச்சை உடைகளும், நாம் களைத்துப் போனோம். இயல்பு நிலை திரும்பும் என்றிருந்து ஏமாந்து போனோம். மீண்டும் எமது செவிகளில் ஷெல் சத்தங்களும் 'பொம்பர்' இரைச்சல்களும் கேட்பதுபோல் இருக்கிறது. எமது நித்திரையில் கரிய இருளுக்குள் இருந்து பெண்கள் கத்துவது கனவாக வருகின்றது.*

*'நாம் ஷெல்லடி', 'பொம்பர்' இரைச்சல், 'பங்கர்' வாழ்வு, பயமான இரவுகள், எங்கள் பெண்களின் கதறல்கள், எமது சொந்தங்களின் இழப்புகள் இவை எதுவுமே இல்லாமல் எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்துப் பார்க்கிறோம். நீங்களும் வருகின்றீர்களா? வந்தால் எங்கள் கரங்கள் பலப்படும். நம்மால் சில மாறுதல்களைச் செய்ய முடியும் என நம்புகின்றோம்.*

*"நாம் கேட்க நினைப்பதெல்லாம் - நாம் அறிவிக்க ஆசைப்படுவதெல்லாம் - ஒன்றுதான் நாங்கள் எங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்பதுதான் அது.*

*"மிகவும் அடிப்படையான - மிகவும் ஜனநாயகமான - மிகவும் நாகரிகமான - ஆனால், அத்தியாவசியமான, நேர்மையான, உண்மையான, அன்பான வேண்டுகோள் இது; எமது ஆசையின் வெளிப்பாடு இது. ஆனால், மிகவும் உறுதியானது."*

- ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தைப் பார்த்து இப்படி அன்போடு வேண்டுகோள் விடுத்திருக்கிறது யாழ்.பல்கலைக்கழக சமூகம்.

தமிழரின் உரிமைப் போருக்காக நியாயமான குரல் கொடுத்த பெருமைமிகு பாரம்பரியம் உடையது யாழ்.பல்கலைக்கழகம். விடுதலைப் போரின் இக்கட்டான ஒரு சூழலில் - எழுத்தில் வடிக்க முடியாத அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் - அவலப்பட்ட தமிழர்குரலை ஒன்று திரட்டி, அவர்கள் உணர்வுகளைப் பீறிட வைத்து, 'பொங்கு தமிழாய்ப்' பிரவகிக்கச் செய்து, தமிழுணர்வை ஒரு குடையின் கீழ் திரட்டிய வரலாற்றுச் சாதனைக்கு அங்குதான் விதை விதைக்கப்பட்டது.

அந்தப் பல்கலைக்கழகச் சமூகம் மீண்டும் ஒருமுறை வீறுகொண்டெழும் சாத்தியம் தென்படுகின்றது.

அன்று - பொங்கிய தமிழால் தமிழர் வலு ஐக்கியப்பட்டது; காட்டிக்கொடுப்புகளும், துரோகங்களும் தூக்கி வீசப்பட்டன. 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கோமாளித்தனத்தின் உண்மைச் சொருபம் அம்பலப்படுத்தப்பட்டது. சமாதானத்துக்கான அமைதி முயற்சி என்ற வழிதடத்துக்கான பாதை திறந்துவிடப்பட்டது.

இன்று - அந்தப் பாதையில் இருக்கும் 'தாயக ஆக்கிரமிப்பு' என்ற தடைக்கற்களை அகற்றுவதற்கு மீண்டும் உணர்வு பொங்குகின்றது. அது பிரவகித்து இந்த தடைக்கற்களை அகற்றுமா?

தமிழரின் இன்றைய ஆதங்கம் இதுதான்!.

## காணாமற்போனோர் குறித்த ஐந்தாம் கட்ட விசாரணை பூர்த்தி

கடந்த 1996ஆம், 1997ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான ஐந்தாம் கட்ட விசாரணைகள் நேற்றுடன் பூர்த்தியடைந்தன.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் நேற்றுத் திங்கட்கிழமை வரை மூன்று தினங்கள் இடம்பெற்ற இந்த விசாரணைகளில் காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் 190 பேர் கலந்துகொண்டு தமது உறவுகள் காணாமற்போனமை தொடர்பான விவரங்களைத் தெரிவித்தனர்.

இந்த விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும், மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் நடத்தியது.

ஆறாம் கட்ட விசாரணைகள் இம்மாத இறுதியில் நடைபெறும் என்றும் அது தொடர்பான திகதிகளும் விசாரணைக்கு அழைக்கப்படுவோரின் விவரங்களும் அறிவிக்கப்படும் எனவும் விசாரணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(எ-10)

## கசிப்பு மாண்மியம்

### புகழவா? இகழவா?

கணவனும் மனைவியுமாய்
காப்போத்தல் கசிப்பை வாங்கி
மனமொத்துக் கருவாடு சுட்டு
மகிழ்ந்தொன்றாய் பருகிவிட்டு
இணக்கமாய் கிடந்த சோற்றை
இருவரும் பகிர்ந்தே உண்டு
பிணக்கின்றி தம்பதியர் ஒன்றாய்
இன்பமே காணக் கண்டேன்
துணைவியை மகிழ வைத்து
தூய நற் காதல் மேவ
இணைத்த இக்கசிப்பின் மாண்பை
இகழவா? புகழவா யான்?

- விகடகவி.

### யாழ். செயலகத்தில் பதிவுசெய்யப்படாத

## பிறப்புக்களை பதிவுசெய்ய 'அதே இடத்தில் சேவை'

குடாநாட்டில் பதியப்படாத பிறப்புக்களை பதிவுசெய்வது தொடர்பான 'அதே இடத்தில் சேவை' எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

சகலருக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் இலக்குடன் நடத்தப்படவிருக்கும் இந்த சேவையில், பிறப்பைப் பதிவுசெய்யாதவர்கள் நேரடியாக ஆவணங்களுடன் சமுகம் அளித்து சான்றிதழைப் பெறமுடியும்.

இது தொடர்பாக மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். அவை பின்வருமாறு:-

பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் வைத்தியசாலைக் கடிதம், தடுப்பூசி அட்டை, பாடசாலைக் கடிதம், சாதகம், ஞானஸ்நானச் சான்றிதழ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் -

பெற்றோரின் பெயர் விவரங்களை உறுதிப்படுத்தும் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், ஏனைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்டவர் விவாகம் செய்திருந்தால் அவரின் விவாகச் சான்றிதழ் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் என்பனவற்றில் கைவசம் உள்ளவற்றுடனும் -

பங்கீட்டு அட்டையுடனும், தேசிய அடையாள அட்டை விசேட அடையாள அட்டை இருப்பின் அதனுடனும் -

தகப்பன், தாய், பிள்ளை மூவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

இவர்களில் யாராவது ஒருவர் வரமுடியாவிட்டால் வரமுடியாமைக்கான காரணத்தை தகுந்த ஆதாரங்களுடன் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி பதிவுசெய்வதற்கான படிவங்களை தங்கள் பிரிவு கிராம சேவையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் அல்லது செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

மக்களுக்கு படிவங்கள் நிரப்பி உதவவும்,

சமாதான நீதிவான் மூலம் உறுதிப்படுத்தவும்,

முத்திரை பெற்றுக்கொள்ளவும் கூட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் போதிய ஆவணங்களுடன் வந்தால் பிறப்புச்சான்றிதழுடன் வீடு செல்லலாம்.

தந்தையார் சமுகமளித்தல் முக்கியமானது - என்றுள்ளது. (ஒ-3)

## சுதந்திர வாழ்வு மலரும் போது கலை, கலாசாரமும் வளர வேண்டும்

### தொல்புரம் விழாவில் கோட்டப் பொறுப்பாளர்

சண்டிலிப்பாய்,ஜூன்3

ஓர் இனம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சுதந்திரம் அடைவதற்கு அது தனித்துவமான கலை, கலாசாரம் என்பவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இதன் அடிப்படையிலேயே தேசியத் தலைவர் போராட்ட ஆரம்ப கட்டத்திலேயே கலை, பண்பாட்டுக்கழகத்தை உருவாக்கி தமிழ் கலை, கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

- இவ்வாறு தெரிவித்தார் சண்டிலிப்பாய் - சங்கானை கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அன்பு.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை ஏற்பாடு செய்த கலை விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிவராசா தலைமையில் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு அருகில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஓர் இனம் விடுதலை பெறுவதற்கு அதற்கு பாரம்பரிய நிலம். தொன்மையான வரலாறு, தனித்துவமான மொழி, பொருளாதார கட்டமைப்பு, கலை கலாசார பண்பாடு ஆகிய ஐந்து அடிப்படை அம்சங்களும் இருக்கவேண்டியது அவசியம்.

அதற்கான அடிப்படை அம்சங்கள் அத்தனையும் கொண்டதோர் இனமாக ஈழத் தமிழினம் இருப்பதால் சுதந்திரத்துக்கும் - சுயநிர்ணயத்திற்கும் உரிய இனமாக இது விளங்கி வருகின்றது.

எமது தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலில் கலை பண்பாட்டுக்கழகம் எமது பாரம்பரிய கலைகளைப் பேணிவளர்க்க காத்திரமான நடவடிக்கைகளை நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றது.

இதுபோன்ற விழாக்கள் எமது கலை, கலாசார பண்பாடுகளை பேணி வளர்ப்பதற்கு பேருதவியாக இருக்கும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தமது உரையில்:-

ஆரம்ப காலத்தில் எமது கலைகள் யாவும் ஆலயங்களில் இருந்தே உருவாகி இறைவனுக்கு படைக்கப்பட்டவையாகவே இருந்து வந்துள்ளன. கலைகளைப் பேணுகின்ற இடங்களாக இந்து ஆலயங்கள் அன்று விளங்கின.

இதனாலேயே, தெய்வீகக் கலைகள் என்று எமது கலைகள் போற்றப்பட்டு வருகின்றன.

கலைகள் ஒன்றிணையும் போது எமது சமூக வாழ்வு மேம்பாடு அடைகின்றது. கலை இல்லாத வாழ்வு நிலையில்லாத வாழ்வு போன்றது. ஒருவரிடம் ஆன்மீக உணர்வு எவ்வாறு ஏற்படுகின்றதோ அதேபோல கலை உணர்வும் தோற்றம் பெறுகின்றது.

கலைஞர்கள் மக்களால் மதிக்கப்பட்டு போஷிக்கப்பட வேண்டியவர்கள். கலைஞர்களுக்கு சரியான வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். கலைஞர்கள் தெய்வீக அம்சம் பொருந்தியவர்கள் இந்தக் கலைஞானிகளை மக்கள் போற்றி ஆதரவு வழங்கவேண்டும் - என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் உரையாற்றுகையில் -

ஆயகலைகள் 64 என்று கூறப்பட்டாலும் இன்று, இசை நடனம், நாடகம் ஆகியன பற்றியே அதிகம் பேசப்படுகின்றது. அல்லும் பகலும் பாடுபட்ட மனிதன் கலைகள் மூலம் மகிழ்ச்சியும் புத்துணர்வும் பெறமுடியும் - என்றார்.

(எ-135)

## கைதடி தோட்டங்களில் பன்றிகள் அட்டகாசம்

### விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிப்பு

கைதடி,ஜூன்3

கைதடிப் பிரதேசத்திலுள்ள விளை நிலங்களில் இரவுவேளைகளில் உலாவும் பன்றிகளினால் விவசாயப் பயிர்கள் சேதமாக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

கைதடி கிழக்கிலுள்ள ஆவரை, வானத்தலட்டி ஆகிய விவசாய விளைநிலங்களில் விளையும் பீற்றூட், கரட், மரவள்ளி உட்பட பல பயிர்கள் இவ்வாறு பன்றிகளினால் துவம்சம் செய்து அழிக்கப்படுகின்றன என்றும் -

இதனால் இப்பகுதி விவசாயிகள் இரவுவேளைகளில் நித்திரையின்றி விவசாய நிலங்களில் காவல்புரியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

எனவே, இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பெரும் நஷ்டத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-75)

### நாளை

வைகாசி 21
புதன்கிழமை
04.06.2003
திதி : சதுர்த்தி
பிற்பகல் 1.29 வரை
நட்சத்திரம் : புநர்பூசம்
காலை 6.08 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 4.22-5.52
ராகுகாலம் : 11.52-1.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வெற்றி என்பது பழத்தைப் போல, கனியக் காலமானாலும் இறுதியில் சுவைக்கும்.

# நயினை உற்சவம் தொடர்பாக வலிகாமம் மக்கள் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,ஜுன்3

இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நயினாதீவு நாகபூஷனி அம்மன் ஆலய உற்சவத்துக்குச் செல்லவுள்ள பிரயாணிகளின வசதி கருதி கூடிய பஸ்சேவையை மேற்கொள்ளுமாறு வலிகாமம் மக்கள கோண்டாவில் போக்குவரத்துசாலை முகாமையாளரிடம் கோரியுள்ளனர்.

ஏ-9பாதை திறக்கப்பட்ட பின் தென்பகுதி யாத்திரிகர்கள் பலர் இம முறை நயினாதீவு உற்சவத்துக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் அமைதி நிலையினால் யாழ்ப்பாண மக்களும் அதிக அளவில் நயினாதீவு உற்சவத்துக்கு செல்ல வாய்ப்புள்ளது.

எனவே, நயினாதீவு உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்துக்கும் - குறிகாட்டுவானுக்குமிடையே மேலும் 20 பஸ்களையாவது சேவையில் ஈடுபடுத்தி பிரயாணிகளின் போக்குவரத்துக் கஷ்டத்தை குறைக்குமாறு கேட்டுக்கொள்வதாக அவர்கள் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், வேலணை உதவி பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள வேண்டுகோளில், அதிக படகுகளை சேவையில் ஈடுபடுத்துமாறும், தற்போது சேவையில் ஈடுபட்டுவரும் படகுகளின் தரத்தை மீளாய்வு செய்யுமாறும் பயணப் பாதுகாப்பை கண்காணிக்குமாறும் வலிகாமம் மக்கள் கேட்டுள்ளனர்.

## சூழல்தின நிகழ்வு

அரியாலை அபிவிருத்திச் சங்கம நடத்தும் உலக சூழல் தின நிகழ்வு நாளைமறுதினம் நண்பகல் 12மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

அரியாலை அபிவிருத்தி சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக பாலராணி வேல்முருகுவும் சிறப்பு விருந்தினராக அதிபர் பொ.நடராசாவும் கலந்துகொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. உலக சூழல்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில் வழங்குதலும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-30)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தி, இராமகிருஷ்ணா வீதியில், பலாலி வீதிக்கு 50 யார் தொலைவில் 7 பரப்புக் காணியும், பாம் ஸ்கூலுக்கு அண்மையில் பலாலி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் 18 பரப்புக் காணியும், இருபாலை வீதியில் இருந்து பாற்பண்ணைக்குச் செல்லும் வீதியில் 100 யார் தொலைவில் 24 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு:-

S.சுரேஸ்.
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. : 0777 - 064110

(18560)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ *100% இளமையையும் வலிமையையும் தரும்!*

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*MANUFACTURED BY:*
**SITHARA PRODUCTS,**
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.

(27864)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 06 - 09 - 1948



இறைவன் அடியில் 07 - 05 - 2003

### அமரர் ஐயாத்துரை குலசிங்கம்

(உரிமையாளர், குலம் கிறீம் ஹவுஸ், மானிப்பாய், யாழ்ப்பாணம்)

திதி:- ஷஷ்டி 06-06-2003 வெள்ளிக்கிழமை

அன்புடையீர்!

கடந்த 07-05-2003 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வம் ஐயாத்துரை குலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04-06-2003 புதன்கிழமை காலை 8 மணியளவில் சாட்டி தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிரியைகள் 06-06-2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு, இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்குப் பலவழிகளிலும் ஆறுதல் தெரிவித்தும் துன்பத்தில் பங்கு கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்கள் மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

குலம் கிறீம் ஹவுஸ், ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

(18665)


## JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA.

e-mail : jti@sltnet.lk Reg. No 15251 T.P : 0777-292127

### A/L 2003 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி நெறி

கடந்த 24 வருடங்களாக கணனித்துறையிலும் தொழில்நுட்பத்துறையிலும் பெரும் பங்காற்றி வரும் எமது நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை வழங்கி வருகிறது அதேபோல் இவ்வாண்டும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

**Diploma Courses**

Diploma in Microsoft Office XP — Duration 5 Months
Diploma in Hardware Engineering — Duration 4 Months
Diploma in Desktop Publishing — Duration 4 Months
Diploma in Computer Programming — Duration 8 Months
Diploma in Windows Application — Duration 6 Months
Diploma in Visual Basic Programming — Duration 4 Months

**Certificate Courses**

Word XP
Excel XP
Access XP
PowerPoint XP
Corel Draw 11
Page Maker 7
Visual FoxPro 6
HTML
Java
Oracle
Pascal
C/C++

பிரிவு III ஆரம்பம் 07.06.03 / 10.06.03 11.00 மணி

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்

பதிவாளர்
J.T.I,
இல:07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

**APPLICATION FORM**

Full Name : ..............................
Address : ..............................
Date of Birth : ..............................
Course : ..............................

.................... Date .................... Signature of Applicant

Head Office:
No: 11/10B, Stanly Road,
Jaffna. Sri Lanka.

Branch:
No: 07, Palaly Road,
Jaffna, Sri Lanka.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 03 - 1947



உதிர்வு 16 - 05 - 2002

எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை மகேந்திரராஜா

(முன்னாள் கிராம சேவை உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவு, கரணவாய் வடக்கு, J/360)

திதி:- 03-06-2003

தலைமகனே பாசத்தைப் பொழிந்து எங்கள்
அனைவரின் நெஞ்சில் நீங்காத இடம் பிடித்து
பாதியில் சென்றுவிட்டாய்! உன் திருமுகத்தை
நினைத்து எங்கள் மனம் துன்புறுகின்றது!
உன்பிரிவைத் தாங்காத உள்ளங்கள் உணர்வுகளை
இழந்துவிட்டன. ஓராண்டு சென்றாலும் என்றும்
எம் நெஞ்சங்களில் உன் நினைவுகள் நிறைந்து
நிற்கும் உங்களின் ஆத்மா சாந்தி பெற என்றும்
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
தாய், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், மருமக்கள், பெறாமக்கள்.

உடுப்பிட்டி வீதி, மாலிசந்தி,
கரவெட்டி.

(18450)

# மின்சாரக் கட்டணத்தில் குழப்பமா?

ஒவ்வொரு மாதமும் 20-25 ஆம் திகதிக்குள் எமது வீட்டு வாசலில் "டிங்" என மணி ஒலிக்கும். வெளியே ஓடிவந்து யாரென எட்டிப்பார்த்தால், ஒருவர் சிரித்த முகத்துடன் சைக்கிளை விட்டு இறங்கி ஒரு பத்திரத்தைத் தந்துவிட்டு எமது மின்மானியை நோக்கிச் செல்வார். அப்பத்திரத்தைப் பெற்றதும் மனம் "திக்திக்" என அடிக்கும். கண்கள் விரைவாக இம்மாத விதிப்பனவைத்தேடும் உள்ளே இருந்து மனைவியின் குரல் வரும். "என்னப்பா இந்தமாதம் எவ்வளவு வந்திருக்கு?" "தொளாயிரத்து நாற்பத்தாறு வந்திருக்கு" என்று சொல்ல உள்ளே வாத்தியம் முழங்கும். "நீங்கள் இரவிரவாக மின்விசிறியைப் போட்டிட்டு படுக்கும் போதே எனக்குத் தெரியும் இப்படித் தான் வருமென்று. தேவையில்லாமல் காலுறையையும், பெனியனையும் அயன் பண்ணும்போதே யோசித்திருக்க வேண்டும். உங்களாலைதான் மின் கட்டணம் எப்போதும் அதிகமாக வருகிறது. இனிமேல் உங்கடை சாப்பாட்டை 'கட்' பண்ணித்தான் காசுகட்ட வேண்டும்........".

நானும் பொறுமையாக, "கொஞ்சம் பொறுமப்பா இந்தமாதம் காசு கூட்டியிருக்கிறார்கள்போல இருக்கு, பக்கத்து வீட்டு ரீச்சரைக் கேட்டுவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே போவேன். அப்போதுதான் மின்மானி வாசிப்பாளர் ரீச்சரிடமும் பத்திரத்தைக் கொடுத்துவிட்டு என்னைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டுப் போவார். பத்திரத்தைப் பார்த்த ரீச்சரும் ஏங்கி நிற்பார். நானும் "என்ன ரீச்சர் எவ்வளவு வந்திருக்கிறது?" என்பேன். "எண்ணூற்றி முப்பத்திரண்டு வந்திருக்கிறது" என்பார். "நாங்கள் ஒருநாளும் குளிர்சாதனப்பெட்டியோ, மின்விசிறியோ, மின் அழுத்தியோ வீட்டில் உபயோகிப்பதில்லை. ஏன்தான் இவ்வளவு தொகை வருகிறது தெரியவில்லை" என அங்கலாய்ப்பார். இதற்கிடையில், அயலவர்கள் சிலரும் கூடி இதை விவாதிப்பார்கள். எங்கள்கதை மின்கட்டணத்திலிருந்து எங்கெங்கோ செல்லும். இறுதியில் "உவங்களை ஒருக்கால் போய்க் கேட்கவேண்டும்" என்று கூறி பிரிந்து விடுவோம். அதன்பின் அடுத்த மாதக் கட்டணம் வரும்வரை அதைப்பற்றிய கவலையே வராது.

இது அன்றாடம் ஒவ்வொரு மாதமும் உங்கள் வீடுகளிலும் நடக்கும் ஒரு சம்பாசனையாக இருக்கும் என நினைக்கிறேன். நான் இது பற்றி வேலை செய்யும் இடத்திலும் சக ஊழியருடன் கதைப்பேன். ஒருவர் கூட தமது மின்சாரக்கட்டணம் சரியாக வந்திருக்கிறது என்று கூறமாட்டார்கள். எல்லோரும் தங்கள் பங்கிற்கு இலங்கை மின்சார சபையைத் திட்டித் தீர்ப்பார்கள். இதற்குள் சிலர் "எங்கள் வீட்டில் மின்மானி இல்லை. இதனால் நாங்கள் இப்ப சமைப்பதுகூட மின்னடுப்பை உபயோகித்துத்தான் எனப் பெருமையடிப்பார்கள். அவர்கள்தான் மின்கட்டணம் வரும்போது சந்தோசப்படும் சில பிறவிகளாகும். ஏனையோருக்கு இது ஒரு பாரமாகவே இருக்கும். மின்சாரமும், தொலைபேசியும் ஒரே மாதிரித்தான். பாவிக்கும்போது எல்லை புரியாது. பாவனைக்குரிய கட்டணம் வரும்போது தாங்கமுடியாது.

நானும் ஒவ்வொரு மாதமும் கட்டணத்தொகை வரும்போது, கட்டணத்தொகையைப் பாவித்த கூறுகளால்(Units) பிரித்துப் பார்த்தேன். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சராசரி வரும். எப்படித்தான் கணிக்கிறார்களோ எனக் கோபம் வேறு வரும். ஒருமுறை நமது மின்சாரப்பட்டியலில பாவித்த கூறுகள் 100என்றும், இம்மாத விதிப்பனவு ரூபா 482.90 என்றும் வந்தது. எனக்கு ஒரே சந்தோசமாக இருந்தது. இம்முறை மிகச் சரியாக சராசரி காணலாம் என எண்ணினேன். அதன்படி ஒரு கூறிற்கு ரூபா 4.83எனக் கணித்தும் வைத்திருந்தேன். அயலவர்கள் கேட்டாலும் நான் இக்கணிப்பின்படி அவர்களுக்கு வந்த தொகை சரியா எனப்பார்ப்பேன். ஒரு கணிப்பும ஒத்து வருவதில்லை. மின்மானி வாசிப்பாளரிடம் சந்தேகத்தைக் கேட்டிருக்கலாமோ என்னவோ, கேட்க மனம வரவில்லை. அவர் தானுண்டு தன் வேலையுண்டு என்பது போல வந்து விட்டுப் போய்விடுவார்.

மின்கட்டணத்தொகை வந்தவுடன கொஞ்சநாள் எல்லாவற்றையும் கவனமாகப் பாவிப்போம். பின்னர் எல்லாம் பழைய கதைதான். இவ்வாறு வாழ்க்கையில் மின்சாரம் ஒரு பாரமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு நல்ல சந்தர்ப்பம் தேடி வந்தது.

வழமையான காரணங்களால் பிற்போடப்பட்டு கடந்த பெப்ரவரிமாத மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் போய்விட்டது. சில நாள்களின் முன் மார்ச்மாதக் கட்டணமும் வந்தது. அப்பாடா இம்முறை கொஞ்சம் குறைவாக வந்துள்ளது என எண்ணியவாறு, இரண்டு மாதத் தொகையையும் செலுத்த ஆயத்தமாகி, சென்றமாத மின்சாரப் பட்டியலையும் தேடி எடுத்தேன். வழக்கம்போல சராசரி எவ்வளவு எனப் பார்க்க வெளிக்கிட்ட போது ஓர் அதிசயத்தைக்கண்டேன். பெப்ரவரிமாதத்திலும், மார்ச் மாதத்திலும் நாம் ஒரேயளவு மின்சாரக் கூறுகளையே (90)பாவித்திருந்தோம். ஆனால், செலுத்தவேண்டிய தொகை மாசி மாதத்திற்கு ரூபா435.60 என்றும் (படம்:1), பங்குனி மாதத்திற்கு ரூபா387.75 என்றும் (படம்:2) இருந்தது. இம்முறை இலங்கை மின்சார சபையினர் வசமாக பிடிபட்டு விட்டார்கள் என்று எனக்குள் ஒரு சந்தோசம்.

உடனே என்னுடன் வேலை செய்

கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதீகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

யும் சக ஊழியர்களுக்கு இரண்டு மின்சாரப்பட்டியலையும் காட்டி நான் கண்டுபிடித்ததைப்பற்றிப் பெருமையாகக் கூறினேன். எல்லோரும் மின்சாரப் பட்டியலைப் பார்த்து ஏங்கினார்கள். இது எப்படி என வியந்தனர். அண்மையில் இரு "ஹைஏஸ்" வான்கள் ஒரே நம்பருடன் பிடிபட்டதாக "உதயன்" பத்திரிகையில் படமொன்றைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா! அதேபோன்று தான் இங்கும் ஒரேயளவு பாவித்த கூறுகளிற்கு இருவேறு விதிப்பனவுகள் வந்திருப்பதை படங்களில் காணலாம். உடனே ஒருதுணிவு வந்தது. எப்படியாவது இலங்கை மின்சார சபையிடம் போய் விசாரிக்க வேண்டுமென முடிவெடுத்தேன். உடனேயே புறப்பட்டு மின்சாரசபை அமைந்துள்ள அலுவலகம் போனேன். வாசலில் "வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள களில் காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்" என எழுதியிருந்தது. மணிக்கூட்டைப் பார்த்தேன் சரியாக மணி12.30இனைக் காட்டி என்னைப் பார்த்து பரிதாபமாகச் சிரித்தது. எதற்கும் விசாரித்துப் பார்ப்போம் என்க் காவல் இருந்தேன். எனக்கு முன் இருவர் ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தனர். எனது முறை வர, நான் அங்கிருந்த அலுவலரிடம் போனேன். "என்ன விடயமாக வந்திருக்கிறீர்கள்" எனப் பண்பாகக் கேட்டார். நான் மின்சாரக் கட்டணத்தில் குழப்பம் உள்ளதால் சில தகவல்கள் வேண்டுமென்றேன். அவர் "உள்ளே போய்க் கதையுங்கோ" என்றார். உள்ளே இருந்த அறைவாசலில் போய் நின்றேன். "உள்ளே வாங்கோ" என அன்பான குரல் கேட்டது. உள்ளே சென்று "உட்காரலாமா" எனக் கேட்டு விட்டு அமர்ந்தேன். என்ன பிரச்சினை என அந்த உத்தியோகத்தர் கேட்டார். நானும் எனக்கு மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக சில தகவல்கள் வேண்டும் எனக்கூறி, எனது இரண்டு மாத விதிப்பனவுகளில் ஒரேயளவு பாவித்த கூறுகளுக்கு இருவேறு விதிப்பனவுகள் வந்திருக்கின்றன என்று எனது மின்சாரப்பட்டியல்கள் இரண்டையும் காட்டினேன். அவரின் முகத்தில் அதிர்ச்சியை எதிர்பார்த்த எனக்கு மிகவும் ஏமாற்றமாகப் போய்விட்டது. அவர் சர்வசாதாரணமாக "எங்களிற்குத் தெரியும்" என்றார். பின்னர் அவரின் உதவியாளர் ஒருவரைக் கூப்பிட்டு, ஒரு கையேட்டைக் கொடுத்து எனது பட்டியலுக்கான தொகையை எடுங்கோ எனக் கூறினார்.

பின்னர் அவர் பல விடயங்கள் பற்றி எனக்குக் கூறினார். அவற்றை மின்பாவனையாளர்களுடன் பகிர்ந்து கொண்டால் எனக்கு ஏற்பட்ட சந்தேகமும் குழப்பமும் மற்றவர்களுக்கும் ஏற்படாது என நினைத்து எழுதுகிறேன்.

முதலில் எமது வீடுகளிலுள்ள மின்மானி எவ்வாறு ஓடுகிறது எனப் பார்ப்போம். மின்மானி வாசிப்பில் ஒருகூறு (Unit) ஓடுவதற்கு எவ்வளவு மின்சாரப் பாவனை தேவை என நீங்கள் யோசிக்கலாம். ஒரு கூறு மின்சாரமானது ஒரு கிலோ வாற்று மணி அளவு சக்திக்குச் சமனாகும். அதாவது நீங்கள் 1000w (வாற்று) வலுவுள்ள ஓர் உபகரணத்தை ஒரு மணிநேரம் உபயோகித்தால் மின்மானியில் ஒரு கூறு ஓடும். சுலபமாக நினைவில் வைத்திருப்பதானால், நீங்கள் வழமையாக உபயோகிக்கும் 100 w வலுவுள்ள மின்குமிழ் ஒன்றை 10மணி நேரம் எரிய விட்டீர்களானால் ஒரு கூறு மின்சாரம் ஓடும். சாதாரணமாக வீட்டில் உபயோகிக்கும் மின் உபகரணங்களின் வலுவை கீழே குறிப்பிடுகின்றேன். அதிலிருந்து உங்கள் மின்சக்திப் பாவனையைக் கணித்துக் கொள்ளுங்கள்.

மின்விசிறி: 75 w
தண்ணீர்ப்பம்புகள்: 800 w
மின்னடுப்பு: 1000-1500 w
மின் அழுத்தி: 750-1000 w
குளிர்சாதனப்பெட்டி: 150 w
தொலைக்காட்சிப்பெட்டி:110 w
V.C.R.அல்லதுV.C.P:25 w
ரேடியோக்கள்: 10-150 w

அடுத்து எமது மனதில் வரும் கேள்வி மின்சாரக்கட்டணம் எவ்வாறு அறவிடப்படுகிறது என்பதாகும். மின்சாரக்கட்டணம் வீட்டுப்பாவனை, தொழிற்சாலைகள், பொதுவான பாவனைகள் என்பவற்றுக்கு வேறுவேறாகக் கணிக்கப்படுகிறது. நாம் வீட்டுப் பாவனைக்கு எவ்வாறு கணிக்கப்படுகிறது என்று மட்டும் இங்கு பார்ப்போம். இங்கு மூன்று வகையான விதிப்பனவுகள் உண்டு.

முதலாவது நிலையான விதிப்பனவு. இதுவொரு பொதுவான விதிப்பனவாகும். மின்சார இணைப்புள்ள அனைவரும் ஒவ்வொரு மாதமும் மின்சாரம் உபயோகிக்கின்றோமோ இல்லையோ ரூபா30.00 செலுத்த வேண்டும்.

இரண்டாவதாக நாம் உபயோகிக்கும் கூறுகளிற்கேற்ப கட்டணம் வேறுபடும். அந்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது. இது 30 நாள்கள் உள்ள மாதமொன்றிற்கான கட்டணமாகும்.

1முதல் 30கூறுகள் வரை ஒரு கூறுக்கு ரூபா3.00 வீதம் அறவிடப்படும்.

31 முதல் 60கூறுகள் வரை ஒரு கூறுக்கு ரூபா3.70 வீதம் அறவிடப்படும்.

61 முதல் 90கூறுகள் வரை ஒரு கூறுக்கு ரூபா4.10 வீதம் அறவிடப்படும்.

91 முதல் 180கூறுகள் வரை ஒரு கூறுக்கு ரூபா 10.60 வீதம் அறவிடப்படும்.

180கூறுகளிற்கு மேல் ஒரு கூறுக்கு ரூபா15.80 வீதம் அறவிடப்படும்.

மூன்றாவதாக V.A.T எனப்படும் பெறுமதி கூட்டுவரி (பெ.கூ.வ.) அறவிடப்படும். இது ஒரு மாதத்தில் எத்தனை நாள்கள் உள்ளதோ (உதாரணமாக 28,29,30,31) அத்தனை கூறுகளிற்கு மேல் நாம் மின்சாரத்தை உபயோகித்தால், எமக்குரிய மொத்தக் கட்டணத்தினது 10% பெ.கூ.வ ஆக அறவிடப்படும். உதாரணமாக நாம் 30நாள்களுள்ள மாதமொன்றில் (உதாரணம்: ஏப்ரல்,ஜுலை.....) 30 கூறுகள் மின்சாரத்தை உபயோகிக்கின்றோம் எனக்கொள்வோம். இதற்கு செலுத்தவேண்டிய தொகை பின்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| நிலையான விதிப்பனவு | 30.00 |
| 0-30 கூறுகளிற்கு | |
| 30x3.00 | 90.00 |
| செலுத்தவேண்டிய தொகை | 120.00 |

இங்கு 30நாள்களில் 30கூறுகள் மட்டும் உபயோகித்தால் பெ.கூ.வ. அறவிடப்படமாட்டாது.

இதே மாதத்தில் நாம் 100 கூறுகள் உபயோகித்திருந்தால் நாம் பின்வருமாறு கணிக்க வேண்டும்.

| | |
|---|---|
| நிலையான விதிப்பனவு | 30.00 |
| 0-30 கூறுகளிற்கு | |
| 30x3.00 | 90.00 |
| 31-60 கூறுகளிற்கு | |
| 30x3.70 | 111.00 |
| 61-90 கூறுகளிற்கு | |
| 30x4.10 | 123.00 |
| 91-100 கூறுகளிற்கு | |
| 10x10.60 | 106.00 |
| இம்மாத விதிப்பனவு | 460.00 |
| பெ.கூ.வ (10%) | 46.00 |
| செலுத்தவேண்டிய தொகை | 506.00 |


இப்போது நாம் எனது பிரச்சினையைப் பார்ப்போம். பெப்ரவரி மாத விதிப்பனவில் 90 கூறுகளிற்கு ரூபா 435.60உம் மார்ச்மாத விதிப்பனவில் அதே அளவு 90 கூறுகளிற்கு ரூபா 387.75உம் வந்தது எப்படி என நீங்கள் வியக்கலாம். பெப்ரவரி மாதத்தில் 28 நாள்களும் மார்ச் மாதத்தில் 31 நாள்களும் உள்ளன அல்லவா. மேலே 30நாள்கள் உள்ள மாதத்திற்கு 30இன் மடங்குகளில் கூறுகள் பிரிக்கப்பட்டதுபோல இங்கும் நாம் 28,31இன் மடங்குகளில் கூறுகளைப் பிரிக்கவேண்டும். உதாரணமாக எனக்கு வந்த இருமாத விதிப்பனவுகளையும் இங்கு கணித்துப்பார்ப்போம்.

**பெப்ரவரி (28 நாள்கள்)**


| | |
|---|---|
| நிலையான விதிப்பனவு | 30.00 |
| 0-28 கூறுகளிற்கு | |
| 28x3.00 | 84.00 |
| 29-56 கூறுகளிற்கு | |
| 28x3.70 | 103.00 |
| 57-84 கூறுகளிற்கு | |
| 28x4.10 | 114.00 |
| 85-90 கூறுகளிற்கு | |
| 6x10.60 | 63.60 |
| இம்மாத விதிப்பனவு | 394.60 |
| பெ.கூ.வ. (10%) | 39.60 |
| செலுத்த வேண்டிய தொகை | 434.20 |

**மார்ச் (31 நாள்கள்)**

| | |
|---|---|
| நிலையான விதிப்பனவு | 30.00 |
| 0-31கூறுகளிற்கு | |
| 31x3.00 | 93.00 |
| 32-62 கூறுகளிற்கு | |
| 31x3.70 | 114.70 |
| 63-90 கூறுகளிற்கு | |
| 28x4.10 | 114.80 |
| இம்மாத விதிப்பனவு | 352.50 |
| பெ.கூ.வ. (10%) | 35.25 |
| செலுத்த வேண்டிய தொகை | 387.75 |



படம்:1



படம்:2

இப்போ ஓரளவிற்கு உங்களால் உங்களிற்கு வரும் மின்சாரக் கட்டணம் சரியா எனக் கணித்துப்பார்க்க முடியும் என நம்புகிறேன். என்னைப் போலக் குழம்பியவர்களுக்கு இத் தகவல்கள் மிகவும் உபயோகமானதாக இருக்கும்.

மேலும் மின்கட்டணத்தை இங்கு குறிப்பிட்டது போல் நீங்கள் கணித்துப் பார்க்கும் போது அதிக வித்தியாசம் வந்தாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் நீங்கள் பணம் செலுத்தியபின் இவை கொழும்பிலுள்ள இ.மி.சஇன் தலைமை அலுவலகத்தில் மீண்டும் கணனி மூலம் கணிக்கப்பட்டு சரி பிழை பார்க்கப்படும். ஏன் பிழையான கணக்கைப் பட்டியலில் எழுதுகிறார்கள் என நீங்கள் வியக்கலாம்.

மின்மானி வாசிப்பாளரும் மனிதர் தானே. அவர் கணிக்கும்போது தவறுகள் விடச் சந்தர்ப்பங்கள் உண்டு. மின்மானிவாசிப்பிற்கு ஏற்ப தொகையைக் கணிப்பதற்கு இ.மி.ச. இனால் "Ready Reckoner" என்ற கையேடு ஒன்று சகல பிராந்திய அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இக்கையேட்டில் ஒவ்வொரு மின்மானி வாசிப்புக்கும் எவ்வளவு பணம் என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வேறு வேறு திகதிகளில் முடிவடையும் மாதங்களுக்கு தனியான பட்டியல்கள் உண்டு. இப்பட்டியலைப் பார்க்கும்போது தவறுதலாக வேறு தொகையைத் தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் இப்பிழையைப் பின்னர் கணனி திருத்திவிடும்.

மின்மானி வாசிப்பாளர் உங்கள் வீட்டுக்கு வரும் திகதியும், பட்டியலில் விதிப்பனவிற்கான திகதியும் அனேகமாக வேறுபட்டிருப்பதையும் நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இது பெரிய பிரச்சனையில்லை. ஆனால், நீங்கள் மின்மானிவாசிப்பாளர் ஒவ்வொரு மாதமும் ஒரே திகதியில் வருகிறாரா என அவதானமாகக் கவனிக்கவும். ஏனெனில் அப்படி அவர் வராவிட்டால் நீங்கள் அதிகபணம் செலுத்தவேண்டி ஏற்படலாம்.

நாம் இப்போது மிக இலாபகரமான பாவனை எது எனப் பார்ப்போம். கட்டண ஏற்ற வீதத்தைக் கவனித்தால் முதல் 90கூறுகள் வரை கட்டண ஏற்றம் அதிகமில்லை. ஆனால் 90 கூறுகளுக்கு மேல் மின்சாரக்கட்டணம் இரண்டு, மூன்று மடங்குகளாக அதிகரிக்கின்றது. எனவே, நாம் அனைவரும் எவ்வளவு கஷ்டப்பட்டாயினும் மின்சாரப்பாவனையை 90 கூறுகளுக்குள் கட்டுப்படுத்தி உபயோகித்தால் லாபகரமானதாகவிருக்கும்.

ஒரு சாதாரண குடும்பத்துக்கு 90 கூறுகள் மின்சாரம் திருப்தியாகப் போதுமானதாகும். இவ்வளவை விடக்கூட வரும்போது சில விடயங்களைக் கவனித்தால் இலகுவாகக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக நாம் படிக்கும்போது அனேகமாக 100w வலுவுள்ள மின்குமிழ்களையே உபயோகிக்கின்றோம். ஆனால், நீங்கள் ஒரு மின்சார மேசைவிளக்கு வாங்கினீர்களானால் 25w வலுவுள்ள மின்குமிழே போதுமானது. அத்துடன், மின்குமிழில் இருந்து உங்களை அடையும் வெப்பத்தின் அளவும் குறையும். இதனால் படிக்கும்போது வியர்வையின்றி நிம்மதியாகவும் படிக்கமுடியும். நம்மில் பலருக்கு மின்சாரத்தை சேமிக்கும் இலகுவான வழிகள் பல இருப்பதே தெரியாமல் உள்ளது. நமது அன்றாடப் பணிகளில் வசதிவாய்ப்புகளை குறைக்காமலேயே நம்மால் மின்சாரத்தை சேமிக்கமுடியும். ஆனால், இதிலுள்ள ஒரேயொரு சிரமம் மின்சாரப் பாவனையைக் குறைக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பவேண்டும் என்பதே.

இவ்வகையில் மின்சாரத்தை சேமிக்கும் சில இலகுவான வழிமுறைகளையும் மின்சாரக்கட்டணம் தொடர்பான மேலும் சில தகவல்களையும் நாளை பார்க்கலாம்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய Dobermann Pincher Great Dane, Dachund நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18683)

### தவறிவிட்டது

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஹம் சானந்தி மகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 836114426V) 07-05-2003 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் க.மகேந்திரன் "கணேசபதி", சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(18689)

நாகநாதன் ஒழுங்கை, கச்சாய் றோட், கொடிகாமத்தைச் சேர்ந்த தவராஜா மயூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.823141947V) பேர்ஸுடன் யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (18679)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் அரசாங்கத்துறையில் பணிபுரியும் உதயச் செவ்வாயுள்ள 42 வயது ஆணுக்கும யாழ்ப்பாணத்தில் ஆசிரியராகத் தொழில் புரியும் செவ்வாய்க் குற்றமற்ற 43வயது பெண்ணுக்கும் தகுந்த மணமக்கள் தேவை. விளம்பர இல.1910, மே/பா உதயன். (18685)

### வேலையாள் தேவை

இலத்திரனியல்
வேலையில்
அனுபவமுள்ளவர்கள்
தேவை.
நேரில் வரவும்.
**செல்வம் ஸ்ரோர்ஸ்**
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-28213)


**சொலெக்ஸ்** மூக்குக் கண்ணாடியகம் பவர் போன் சொப்

இப்பொழுது சாவகச்சேரி நவீன சந்தை கட்டடம் முன்பாக இயங்குகிறது என்பதை வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துகிறோம்.

- உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- கால நிலைக்கு ஏற்ப கலர் மாறக்கூடிய சன்கிளாஸ் வகைகளைப் பெற்றுக் கொள்ளவும்
- மேலும் எந்தப் பிரதேசத்தில் இருந்தும் கொண்டு கொள்ளக்கூடிய பவர் மேசைத் தொலைபேசிகளை உங்கள் இடங்களுக்கே வந்து பொருத்திப் பெற்றுக்கொள்ளவும்
- செல்போன் சிம்கார்ட், கார்ட் வகைகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரியில் ஒரேயொரு ஸ்தாபனம்

**சொலெக்ஸ்** மூக்குக் கண்ணாடியகம் பவர் போன் சொப்

நவீன சந்தைக் கட்டடம் முன்பாக, இல.100 கண்டிவீதி, சாவகச்சேரி சந்தி, சாவகச்சேரி.


## அழைப்புக் கட்டளை

இல.16 - பிரிவு 55 (1)

சாவகச்சேரி என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

தங்கவேலாயுதம் மனைவி
வேலுப்பிள்ளை மகள்
விஜயவசந்தசோபனி
மே/பா.ச.சண்முகராசா.
பிலிப்பு றோட், மட்டுவில் சந்தி,
சாவகச்சேரி.

வழ.இல. மணநீக்கம் /357 - வழக்காளி

எதிர்

அருளானந்தசாமி தங்கவேலாயுதம்,
திருவில், வல்வெட்டித்துறை.
- எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி பிராதின் நிவாரணத்தில் வேண்டி நிற்கும் நிவாரணங்களைப் பெறுவதற்கு,

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடாத் தவறும் பட்சத்தில், வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியை கூறும் விவரக் குறிப்பொன்றை இந்நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றத்தின் ஆணைப்படி:
க.நாகேந்திரன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீர் பெறவிரும்பினால் உமது பதிவுசெய்யப்பட்ட முகவரியை இந்நீதிமன்றின் பதிவாளரிடம் கொடுக்கும்படியும் பதிவு அஞ்சல் மூலம் உமக்கு அதனை அறிவிப்பதற்காக ஏற்படும் அஞ்சல் செலவுக்கான முத்திரைகளையும் கொடுக்குமாறும் இத்தால் குடி.ந.ச.கோயின் 80ஆம் பிரிவின் கீழ் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

க.நாகேந்திரன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

வரைவு
திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன்
வழக்காளியின் சட்டத்தரணி.

(C/28211)

**தெல்லிப்பழை அறிஞர் அண்ணா நாடக மன்றத்தின்**
வளர்ச்சி நிதிக்காக
மன்றத்தினரால் நடத்தப்படும்

## மாபெரும் ஓட்டப் போட்டிகள்

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள சிவன் தையலகத்தில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| முதலாவது சைக்கிள் ஓட்டம் ஆண், பெண் | - கட்டுப்பணம் | 200/- |
| இரண்டாவது மரதன்ஓட்டம் | - கட்டுப்பணம் | 50/- |
| மூன்றாவது கைக்கொடிச் சவாரி ஓட்டம் | - கட்டுப்பணம் | 50/- |
| நான்காவது கிறீஸ் கம்பம் ஏறுதல் | - கட்டுப்பணம் | 30/- |

போட்டி நடைபெறும் நாள்: 05-07-2003 சனிக்கிழமை
நேரம் காலை 6.00 மணி

★ வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் இரவு நடைபெறும் கலை விழாவில் வழங்கப்படும்.

தெல்லிப்பழை. (18693) - நிர்வாகத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மகுலசிங்கம் தயாவதனி (தயா)

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தர்மகுலசிங்கம் தயாவதனி (தயா) அவர்கள் 29-05-2003 வியாழக்கிழமை சென்னையில் இறையடியெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை தம்பதிகளின் (ஊரெழு) இளைய மகளும் காலஞ்சென்ற முதலியார் P.M.சங்கரப்பிள்ளை J.P (வட்டுக்கோட்டை) தம்பதிகளின் அன்பு மருமகளும் ச.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் உதயசங்கர், விஜயசங்கர் ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்றவர்களான P.M.S. ராஜசிங்கம், P.M.S. பூபாலசிங்கம், திருமதி செல்வராணி தெய்வேந்திரராஜா மற்றும் சிவநேசமலர், நல்லைநாதன், தில்லைநாயகி ஆறுமுகம், P.M.S. சற்குணசிங்கம், P.M.S. பாலமுத்துசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான திருமதிகள் ஞானம் சச்சிதானந்தம், புனிதம் மகேசன் மற்றும் ஹேமா சோமசேகரம், கமலாதேவி நாத்தொண்டன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01-06-2003 ஞாயிறு நண்பகல் 12.30 மணிக்கு 1st பெஸன்ட் நகர் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

F-8 ஹிரண்யா அப்பாட்மென்ட்ஸ்,
கிறீன்லேஸ் ஹோட் (எக்ஸ்டென்ஷன்)
ஆர்.ஏ.புரம்.
சென்னை-600028

தகவல்:
ச.தர்மகுலசிங்கம்.

(சி-28214)


**SHARP** ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது

be sharp

# யாழ்ப்பாணத்தில்



- உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
- யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப் பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
- நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

SHARP

Browns Electronics Live it up

BROWNS GROUP BG ESTD 1875

Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# அமைதி முயற்சி அடுத்த கட்டம் செல்ல அரசு துணிந்து முடிவெடுப்பதே ஒரேவழி!

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. டோக்கியோ மாநாட்டுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை விடுதலைப் புலிகள் கோரி நிற்கின்றார்கள். இதுவரை நடந்த 6சுற்று சமாதானப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாததன் விளைவால் ஏற்பட்ட அதிருப்தி மற்றும் நம்பிக்கையீனத்தின் விளைவு இது.

டோக்கியோ மாநாட்டின் மூலம் பெறப்படும் நிதி உதவிகள் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குப் - புலிகள் விரும்புகின்றார்கள்.

டோக்கியோவில் வழங்கப்படும் நிதி உதவி வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்கு மிகவும் அவசியமானது என்று புலிகள் உணர்ந்துள்ளனர். எனினும், அந்த நிதி கடந்த காலங்களைப் போன்று அரசினால் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும், அரசியல்வாதிகளினால் சுரண்டப்படாமல் இருப்பதையும் மிகச் சரியாக உறுதிப்படுத்த விடுதலைப் புலிகளின் தலைமை திடசங்கற்பம் பூண்டுள்ளதாகத் தெரிகின்றது. இலங்கை அரசாங்கத்துடனான கடந்த கால அனுபவங்கள் அப்படிப்பட்டவையே என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் நிதி விடயங்களைக் கையாளக்கூடிய சுதந்திரமான அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாக அமைப்பைப் புலிகள் கோருகின்றனர். அத்தகைய சுதந்திரமான - புலிகளின் அதிகமான பங்களிப்பைக் கொண்ட - நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டு ஏற்படுத்த முடியாது. அல்லது அதற்குப் பல தரப்பட்ட சட்ட சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

எனவேதான், இலங்கையின் அரசமைப்புக்கு வெளியே - புறம்பாக - ஓர் இடைக்கால நிர்வாகத்தை அமைக்குமாறு விடுதலைப் புலிகள் கோருகின்றனர். தமது நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாகவும் நிற்கின்றனர்.

இந்த இறுக்கமான போக்கைத் தான் தன்னைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனிடமும் ஜப்பானின் விசேட தூதுவர் யகுஷி அகாஸியிடமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

"எமது மக்களுக்குப் பயன்படாத நிதியைத்திரட்ட நாம் டோக்கியோ மாநாட்டுக்குப் போக வேண்டுமா?" என்று வேபிரபாகரன் நோர்வே அமைச்சர் பீற்றர்சனிடம் கேட்டதற்கும் இதுவே காரணமாக இருந்தது.

ஆனால், அரசு இந்த விடயத்தில எவ்வளவு தூரம் உண்மையாகச் செயற்படுகின்றது என்பது கேள்விக்குரியது. ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளின் இறுக்க நிலை. மறுபுறத்தில் எப்போது இந்த அரசின் காலைவாரிவிடலாம் என்று காத்துக் கொண்டிருக்கும் சந்திரிகா. இவற்றை ஒருசேர சமாளிக்க வேண்டிய இக்கட்டு நிலை பிரதமர் ரணிலுக்கு. எனவேதான் புலிகளுக்குத் தெளிவான ஒரு பதிலை அளிக்காத அதேநேரம், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதான போக்கைக் காட்டிக் கொண்டு, ஜனாதிபதி தனது அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழிவகுக்காதபடி - இலங்கை அரசஅமைப்புக்கு உட்பட்ட - ஒரு நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து அவர் பிரேரித்தார்.

ரணிலைப் பொறுத்தவரையில் சிறந்த ஜனநாயக அரசியல் சாணக்கியத்தின்படி இந்தச் செயல் பாராட்டத்தக்கதாக இருக்கலாம். ஆனால், அவர் பேசிக் கொண்டிருப்பது இன்னுமொரு ஜனநாயகக் கட்சியுடன் அல்ல என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியிருப்பது அவசியம். இனிவிடுதலைக்காக ஓர் ஆயுதம் ஏந்திய போராளிக் குழுவுடன் பேச்சு நடத்திக் கொண்டு ஜனநாயக நழுவல் போக்கை அவர் கடைப்பிடிப்பது எப்போதும் சிறந்த பயனைத் தரப்போவதில்லை. இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் போது இதே ஜனநாயகப் பண்புகள் கடைப்பிடிக்கப்பட்டன. அதாவது, நிறைவேற்றப்படாத உறுதிமொழிகள் அல்லது தேர்தல் வாக்குறுதிகள் என்ற தெற்காசிய ஜனநாயகப் பண்புகளை நடைமுறைப்படுத்த விளைந்ததன் முடிவாகவே இப்போது பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 6 சுற்றுப் பேச்சுக்களில் மக்களின் இயல்பு வாழ்வுக்கென இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. உண்மையான செயற்பாட்டையும் அவை விரைந்து நிறைவேற்றப்படுவதையுமே விடுதலை இயக்கங்கள் எப்போதும் எதிர்பார்த்து நிற்கும்.

பேச்சுக்களை இடைநிறுத்துவதாகப் புலிகள் அறிவித்த போது, இதுவரை தம்மிடம் காணப்பட்ட நெகிழ்ச்சிப் போக்கு முடிவுக்கு வருவதாக அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருந்தனர். தாம் கோரிய இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாகப் பிரதமர் பிரேரித்த புதிய நிர்வாகக் கட்டமைப்பை நிராகரித்ததன் மூலம் தமது இந்த நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை செயல் மூலம் புலிகளின் தலைமை நிரூபித்துள்ளது.

ஆனால், விடுதலைப்புலிகள் இன்னும் நெகிழ்ச்சிப்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். ஒரு விடுதலை இயக்கத்திடம் இருந்து அவர் தொடர்ந்தும் நெகிழ்வுப் போக்கை எதிர்பார்ப்பது விநோதமானது. சமாதான முயற்சிகளில் விட்டுக் கொடுப்புகளும் நெகிழ்ச்சித் தன்மைகளும் தேவையானவையே. என்றாலும், எந்த நேரமும் ஆபத்துக்கு உள்ளாகும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ரணிலை அரசை நம்பி விடுதலைப் புலிகள் எவ்வளவு தூரம் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க முடியும் என்பது கேள்விக்குரியது.

அதுவும், இந்த அரசை தான் நினைத்தால் எந்த நேரத்திலும் கலைத்து விட முடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா மிரட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும் -

சமாதானக் காலப்பகுதியின் இடையிடையே அரசின் செயற்பாடுகள் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் நிலையிலும் -

விடுதலைப் புலிகளிடம் இருந்து எந்த வகையிலான நெகிழ்ச்சிப் போக்கை, அதுவும் எவ்வளவு தூரத்துக்கு ரணில் எதிர்பார்க்கின்றார்?

சீராகச் சென்று கொண்டிருந்த சமாதானப் பேச்சுக்களில் முதல் விரிசல் அமெரிக்காவின் வாஷிங்ரனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டின் போதே ஏற்பட்டது. இதில் புலிகள் ஓரங்கட்டப்பட்டமை அவர்களுக்குச் சீற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியது. அத்துடன், வாஷிங்ரன் சென்ற பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கு கடற்படைக்கான கப்பல் கொள்வனவு குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டமையும் அரசின் சமாதான முயற்சிகள் குறித்துப் புலிகளைச் சந்தேகங்கொள்ள வைத்தது. வாஷிங்ரன் மாநாட்டில் தாம் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டதாகப் புலிகள் உணர்ந்ததன் விளைவுகளை அடுத்துவந்த வாரங்களில் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பாக இருப்பதன் காரணத்தாலேயே வாஷிங்ரன் மாநாட்டுக்குப் புலிகள் அழைக்கப்படவில்லை என்று அமெரிக்கா பின்னர் கூறியது. அமெரிக்காவின் இந்தக் கருத்துக் குறித்த தமது நிலைப்பாட்டை, அண்மையில் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் புலிகள் திட்டவட்டமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

வல்லரசுகள் தமது அமைப்பு மீது தொடர்ந்தும் தடைகளை நீடித்து வருவது சமாதான நடவடிக்கைகளில் எதிர்மறையான நடவடிக்கைகளையே ஏற்படுத்தும் என்று புலிகள் தெரிவித்துள்ளனர். பிராந்திய வல்லரசு என்ற வகையில் இந்தியாவும் தம் மீதான தடைகளை நீடிப்பது குறித்த தமது விசனத்தையும் அவர்கள் வெளிக்காட்டத் தவறவில்லை.

இத்தகைய பின்னணியில் சமாதான முயற்சிகளின் அடுத்த நகர்வு என்ன என்பதே இப்போதுள்ள பெரும் கேள்வி. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளது முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்கான உதவிகள் அமையும் என்று மேற்கு நாடுகள் ஏற்கனவே தெரிவித்துவிட்டன. இந்தநிலையில், டோக்கியோ மாநாடடில் புலிகள் கலந்துகொள்ளவில்லையெனில் இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் நிதியில் பெருமளவானது வேறு பக்கங்களுக்குத் திரும்பிவிடக் கூடும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தெற்கில் அரசு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் எதிர்க்கட்சிகளின் டோக்கியோ மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் செல்லாவிட்டால் உதவி வழங்கும் நாடுகள் வழங்கவுள்ள நிதியில் பெருமளவு வெட்டப்படலாம். இது ரணில் அரசின் எதிர்காலத்துக்குப் பெரும் பாதிப்பாக அமையும்.

எனவே, என்ன பாடுபட்டாவது விடுதலைப் புலிகளை டோக்கியோ மாநாட்டுக்கு அழைத்துச் செல்ல அரசு பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றது. மாநாடு பின்போடப்படாது என்று ஜப்பான் அறிவித்துள்ள பின்னணியில் அரசு புலிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் அவசரமாக எதையாவது செய்யக்கூடும். ஆனால், அரசின் அவசர 'அவியல்களை' ஏற்றுக் கொள்வதற்கு புலிகள் தயாராயிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களின் கடும் போக்கு நிலை இதற்கு இடங்கொடாது என்றே தெரிகின்றது.

கிளிநொச்சியில் தமது நிலைப்பாடு பற்றி விளக்கிய கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

"நாம் டோக்கியோ மாநாட்டுக்குச் செல்லவில்லை என்றால் எமது மக்களுக்கான கணிசமான நிதியை இழப்போம் என்பது உண்மை தான். என்றாலும், இந்தச் சின்ன விடயத்தைக் கூட தமிழ் மக்களுக்காக நிறைவேற்றாத அரசு, எப்படித் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றது என்ற செய்தி உலக நாடுகளுக்கு இதன் மூலம் எடுத்துச் செல்லப்படும்" - என்று அவர் தெரிவித்திருந்தார்.

எனவே, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்த கோரிக்கை தொடர்பாக அரசு அதிரடியான - துணிச்சலான - முடிவுகளை அடுத்துவரும் சில தினங்களுக்குள் எடுக்க வேண்டும். சமாதான முயற்சிகளை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவதற்கு இருக்கும் ஒரேவழி அதுவே. இல்லையெனில் சமாதான முயற்சிகள் மேலும் மேலும் சிக்கலான நிலைக்குள் தள்ளப்பட்டு விடும்.

**- அன்ரன் -**

ஆனால், அத்தகைய ஒரு துணிச்சலான முடிவை ரணில் அரசு எடுத்தால், அதனை உடனடியாகக் கலைத்து விடுவதாக சந்திரிகா மிரட்டி வரும் நிலையில், பிரதமர் செய்யப் போவது என்ன என்பதே இப்போதுள்ள முக்கிய கேள்வி. அவர் எதனைச் செய்தாலும் இன்னும் ஒரு சில நாள்களுக்குள் செய்தாக வேண்டும். ஆகவே, அடுத்து வரும் நாள்கள் இலங்கை அரசியலில் மிக முக்கியமானவை என்பது மட்டும் சர்வ நிச்சயம்.



# பண்ணிசைப்போட்டி முடிவுகள்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இணுவில் திருநெறி தமிழ்மறைக்கழகம் மாணவர்களிடையே நடத்திய பண்ணிசை, மனனப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரிவுகள், முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

பண்ணிசைப்போட்டியில்-கீழ்ப்பிரிவில்-கே.வாசகனி(இணுவில்), பே.மகிஷியா(சுதுமலை), வே.சிந்துஜா(இணுவில் மத்திய கல்லூரி)ஆகியோரும்-

மத்திய பிரிவில் - அ.அமிர்த சிந்துஜன் (இணுவில் மத்திய கல்லூரி), வி.சுதாஜினி (இணுவில்), கு.அனுஜன் (இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரும்-

மேற்பிரிவில் - ஜே.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), து.துஷ்யந்தினி (இராமநாதன்கல்லூரி), கு.ஜெகஜனனி (இணுவில்) ஆகியோரும் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

மனனப்போட்டியில் க.மதுரா (அளவெட்டி), சு.கனிமொழி (யாழ்ப்பாணம்), ந.சதாசிவகுமரன் (மகாஜனக்கல்லூரி) ஆகியோரும் ஆரம்பப்பிரிவில் பரிசில்களைப் பெற்றுள்ளனர். (ஒ-ரி-152)

# சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய்,ஜூன்3

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 13ஆம் திகதி அன்று காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. (எ-135)

★ ★ ★

தென்மராட்சி,ஜூன்3

சாவகச்சேரி கச்சாய் வீதி கந்தனை முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றதுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ள இந்த மகோற்சவத்தில் இம்மாதம் 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (எ-12)

★ ★ ★

கோண்டாவில்,ஜூன்3

சுழிபுரம் பறாளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள சனிக்கிழமை வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சமும் இடம் பெறும். (எ-85)

★ ★ ★

கோண்டாவில்,ஜூன்3

கோண்டாவில் மேற்கு உப்புமடம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை வைகாசி விசாக தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-85)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

கோண்டாவில் சிவகாமி அம்பாள ஆலய மஹோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.(ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

ஆரலி ஆவரம் பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 14ஆம் திகதி பொங்கலுடன் உற்சவ நிகழ்வுகள் நிறைவடைகின்றன. (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

கங்காளை வெல்வில் இலுப்பையடி தாள் முருகமூர்த்தி ஆலய மஹோற்சவதினத்தை முன்னிட்டு நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆலயத்தில் விசேட அபிஷேகம் இடம்பெற்றது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவம் இன்று மாலை 4 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை இந்திய நாதஸ்வர, தவில் கலைஞர்கள் பங்கேற்று மங்கள இசை வழங்க உள்ளார்கள். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 6ஆம் திகதி இடம் பெறவுள்ளது. அன்றைய தினம் நண்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகம் ஆராதனையும் நடைபெற்று இரவு பொங்கல் விழாவும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூன்3

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நவநாள் ஆராதனை நாள் புதன்கிழமை தொடக்கம் மாலை 5.30 மணிக்கு தினமும் இடம்பெறும்.

இம்மாதம் 12ஆம் திகதி நற்கருணை விழாவும் 13ஆம் திகதி திருவிழா திருப்பலியும் மாலை தேர்ப்பவனியும் நடைபெறும். (ஒ-30)

★ ★ ★

மானிப்பாய்,ஜூன்3

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சதுர்த்தித் திருவிழா நாளை புதன்கிழமை இடம்பெறுவுள்ளது.

இத்தினம் விநாயகர் வீதியுலா வரும் நிகழ்வு மாலையில் இடம் பெறும். (ஒ-ரி-90)

★ ★ ★

மானிப்பாய்,ஜூன்3

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் இடம் பெற்று வருகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

உற்சவ தினங்களில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கு.பாலசண்முகனின் திருப்புராணத் தொடர் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது. (ஒ-ரி-90)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூன்3

கந்தரோடை அருளானந்த விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் தினமும் இரவு ஏழு மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி) "பெரியபுராணச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஒ-ரி-152)

★ ★ ★

தென்மராட்சி,ஜூன்3

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ் உற்சவம் நடத்தப்படவுள்ளது. யாழ்.குடாநாட்டிலிருந்து வரும் பக்தர்களின் நலன்கருதி முகமாலையிலிருந்து விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

**ஆசிரியர் தேவை**

தரம் 5 முதல் O/L வரையான தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகியவற்றில் தேர்ச்சியும் அனுபவமுள்ள (வீட்டுக்கு வந்து கற்பிக்கக்கூடிய) ஆசிரியர் ஒருவர் தேவை. முயற்சிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு:
**NEW REST HOUSE**
19. சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P. 222 5928. (18705)


## நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடும். வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் தொடர்பாக அமைச்சர் கரு ஜயசூரிய விசேட அறிக்கை ஒன்றை சபையில் விடுப்பார். அதன் பின்னர் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைகள் மீது எம்.பிக்கள் உரை நிகழ்த்துவர்.

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் புனரமைப்பு

கடந்த கால போரின் காரணமாக அழிந்துபோயுள்ள கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கவுள்ளது. இதற்காக திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்புனரமைப்புப் பணிப்பு 17 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)

## கவுணியர்கோன்



**சேதுமாதவ ஐயர் சிவசுப்பிரமணியசர்மா**

**(நேற்றுவரை- யாழ். இந்துவின் உபஅதிபர்)**

அகவை அறுபது ஏட்டளவில்
உள்ளமும் உடல் வலியும்
இருபத்தைந்தை சாற்றுகின்றன.
முப்பத்தெட்டாண்டுகள் முழுச்
சேவை கண்டாய்
முப்பதுக்கு மேல்யாழ்.இந்துவுடன்
உன் கையால் ஓங்கி வளர்ந்தோர்
ஓராயிரத்துக்கு மேல்
ஓய்வின் பின்னும் உன் கல்விப்பணி
ஓங்கி ஒலிக்க அவன் அருள்
பாலிப்பானாக.

*கல்லூரி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (C/28217)

**யாழ்.இந்து சமூகமும், அரசடி நண்பர்களும்**


**நாகம்ஸ் சுன்னாகம்**
சத்தியராஜ், சீதா, தலைவாசல் விஜய், விஜய்சக்கரவர்த்தி நடித்த
**மாறன்** (பிலிம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.ப.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.ப.) (18645)

**லிபேட்டி** அச்சுவேலி

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
**சொக்கத்தங்கம்** (பிலிம்)
11.00, 3.00, 7.00 (பி.ப.)

**நிறைஞ்சனாஸ்**
கமல், மாதவன் மற்றும் பலர் நடிப்பில்
**அன்பே சிவம்** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING

**ராஜா** யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
விஜய், மீராஜாஸ்மின், கருணாஸ்

**புதிய கீதை**
காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30 (C/27626)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, நாகேஸ், வி.கே.இராமசாமி நடித்த
**இரகசியப் போலீஸ் 115** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.ப.) (18672)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது ஆலயத்தின் நாதஸ்வர வித்துவான்

**அமரர்**

**கலாபூஷணம் பி.எஸ்.பிச்சையப்பா**

அவர்களின் பிரிவு எம்மை பெரும் கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது அஞ்சலியை செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ சாயி துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில்.* (18709)

பரிபாலன சபை
ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசேஸ்வரி கணேசபிள்ளை

**(இராசாத்தி - திருகோணமலை)**

திருமதி இராசேஸ்வரி கணேசபிள்ளை அவர்கள் நேற்று (02.06.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூ.கணேசபிள்ளையின் அன்பு மனைவியும் திருமதி விஜயகாந்தியின் பாசமிகு அன்னையும் நரேந்திரனின் (இ.போ.ச. யாழ்.சாலை) அன்பு மாமியாரும் செல்வி வைதேகி (விவசாயபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) செல்வன் திருத்தணிகன் (யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ்.கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.187/5 கில்னர்லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
க.நரேந்திரன்
*(மருமகன்)*

### திருமதி நாகலிங்கம் செல்லம்மா

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் செல்லம்மா நேற்று (02.06.2003) திங்கட்கிழமை அச்சுவேலியில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*
(18713)

தகவல்:
திரு.நா.அருந்தவராசா
*(மூத்தண்ணை*
*- லொறி உரிமையாளர்)*

# அகவை அறுபதை எட்டும் சர்மாவின் சேவைநலன் பாராட்டும்

# சாதனை வாழ்த்தும்

முந்தநாளில் உந்தன் முறுகிய தோற்றம் கண்டோம்,
இந்த நாளில் அறுபதும் முடிந்ததாம்
முப்பத்தெட்டு ஆண்டுகள் சேவையதனில்
முப்பதைரை ஆண்டுகளில் இந்துவின் நீரோட்டத்துள்
இணைந்தீர்

நேரம் தவறாது கடமையைச் செய்து பலனை எதிர்
பாராது நின்றீர்
வர்த்தகத்துறைக்கு கால் கோள் இட்டு
வரவுச் சஞ்சிகையைத் தாங்கி நின்று
கிராமங்களூடே ஊடுருவிச் சென்றீர்
அவ்வளவுதான் என்றால்....

அதற்கு மேலாய்
வர்த்தக ஆசிரியனாய்
பாடசாலை வங்கி ஸ்தாபகனாய்
பரீட்சைப் பொறுப்பாளனாய்
பரிசு நிதியச் செயலரும், பொருளருமாய்
முப்பதாண்டுகள் இல்ல மெய்வல்லுநர் போட்டிப்
பதிவாளனாய் நின்றதனால்
மாணவர் மனதில் நிறைந்து நின்றீர்
அதனிலும் மேலாக

ஆசிரியர் சகாயநிதிச் சங்க செயலாளராய், பொருளாளராய்
இலங்கை ஆசிரியர் சங்க உப செயலாளராய்
ஆசிரியர் குரல் தமிழ் வெளியீட்டாளனாய்
வடமாகாண ஆசிரிய சங்க பரீட்சைச் செயலராய்
நின்றதனால்
நாமும்

ஞாபக சக்தியையும், நேரத்தை மதித்தலையும்
அர்ப்பணிப்பையும், உதவி செய்யும் மனப்
பான்மையையும் உட்கொண்டதனால்
இந்து அன்னையும் பெருமை உற்றாள்.

அதன் பேறாக
இன்றைய பிறந்தநாளில்
இனிய நினைவுகளோடு
நீண்ட ஆயுளும்
நிலைபெற்ற சுகங்களும் மலர - இந்துக் கல்லூரி
ஞான வைரவப் பெருமானை வணங்கி
பிரிய விடயல்ல - பிரியாவிடையை
சாதனைச் செய்தியாய்ப் பாட்டில் தருகிறோம்.

ஆக்கம் :
ஐ.கமலநாதன்

**யாழ்.இந்துக் கல்லூரி அதிபரும் பிரதி அதிபர்களும் ஆசிரிய நண்பர்களும்.**



## போதனையிலும் பொதுப் பணியிலும் சிறந்து விளங்கும் ஆசான்

திரு. சே.சிவசுப்பிரமணிய சர்மா அவர்களை கடந்த இருபது ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் கல்வி கற்ற கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அவர் தம் குடும்பச் சிறப்பைப் பற்றியும் அறியும் வாய்ப்பைப் பெற்றேன்.

பொதுப் பணிகளில் நிறைந்த ஈடுபாடு கொண்டவர் சர்மா அவர்கள்.

ஆசிரிய உலகில் சர்மா என விழித்தால் அது சிவசுப்பிரமணிய சர்மாவையே குறித்து நிற்கும். அந்த அளவுக்கு அவர் போதனையிலும், பொதுப் பணியிலும் சிறந்து விளங்கினார்.

ஓய்வுகாலத்தையும் அவர் அர்ப்பணிப்புடன் கல்விப்பணிக்கு ஈயவேண்டும் என்பதே எனது வேணவா. இதுவே அவரது அறுபதாம் அகவையில் நான் முன்வைக்கும் வாழ்த்துடன் கூடிய வேண்டுகோள்.

*யாழ்.வலயம்,*
*யாழ்ப்பாணம்.*

ப.விக்னேஸ்வரன்,
கல்விப் பணிப்பாளர்

## கண்ணியமான உப அதிபர்

திரு.சே.சிவசுப்பிரமணிய சர்மா அவர்கள் ஏறக்குறைய முப்பது ஆண்டு காலம் இக்கல்லூரியில் ஆசிரியராக பகுதித் தலைவராக உப அதிபராக கடமையாற்றியவர் கல்லூரியின் பல்துறை நிர்வாகத்திலும் பங்கேற்று கல்லூரியின் வீறுகொண்ட வெற்றிப்பாதைக்கு வழி வகுத்தவர் என்றால் அது மிகையாகாது. விடுப்பு எதனையும் பயன்படுத்தாது உரிய நேரத்துக்கு முன்னரேயே பாடசாலைக்கு வந்து மாணவர்களின் ஒழுங்கைப் பேணி அவர்களின் ஒழுங்கான கற்றலுக்கு வழி கோலியவர். அவரின் அதீத ஞாபகசக்தி அவரது தனித் திறமை, விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற முக்கிய நிகழ்வுகளை முன்னின்று நடத்தி அவற்றின் வெற்றிக்கு என்னுடன் உறுதுணையாக செயற்பட்டவர். ஓய்வு காலத்திலும் சகல வளங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல கல்லூரி ஞானவைரப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

அ.சிறிக்குமாரன்
அதிபர்,
யாழ்.இந்துக் கல்லூரி

## கணனியை ஒத்த கண்ணியவான்

என் ஆசானை ஒத்தவர் சர்மா அவர்கள். அவர்களுடன் பணியாற்றுவது தனி இன்பம். அந்தப் பாக்கியம் சித்திக்கப்பெற்றவன் நான்.

சர்மா அவர்கள் ஒரு கணனியை ஒத்தவர். சகல புள்ளி விவரங்களும் அவருக்கு அத்துப்படி.

கல்லூரி ஆசிரியர்கள் ஒவ்வொருவரினதும் முதல் நியமனத் திகதி முதல் ஓய்வுபெறும் நாள் வரையான சகல தகவல்களையும் தன் மூளை எனும் கொம்பியூட்டரில் சேமித்து வைத்திருப்பவர். யாழ்.இந்துவில் முப்பது முழு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இது மிகப் பெரியதோர் சாதனையாகும். சாதனை, அவர் காலத்தில் உரியவாறு கவனிக்கப்படவில்லை. என்றாலும் அவர் பெருமையை முப்பது மாணவர் பரம்பரை உணர்ந்திருக்கின்றது.

அறுபது வயதிலும் இளமையுடன் திகழும் சர்மா அவர்கள் மேலும் கல்விச் சமூகத்திற்கு தன் ஆற்றலையும் அனுபவத்தையும் வழங்க வேண்டும் எனக் கேட்டு மேலும் பல ஆண்டுகள் அவர் நலமுடன் வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.

*யாழ்ப்பாணம்.* (C/28218)

இ.ஓங்காரமூர்த்தி
பிரதி அதிபர்,
யாழ்.இந்துக் கல்லூரி

# கவிஞர்களை கால கட்ட, உள்ளடக்க ரீதியில் பார்க்கும் சூத்திரப் பாங்கை விலக்குவோம்

'தூண்டி' இலக்கியவட்டம் ஏற்பாடு செய்த ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.பல்கலைக் கழக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வரங்கின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து ஏற்பாட்டாளரான தி.செல்வமனோகரன வழங்கிய செவ்வி இது.

*கேள்வி:* ஈழத்துத்தமிழ்க் கவிதை ஆய்வரங்கு ஒன்றை நடத்தவேண்டும் என்ற மன எண்ணம் எப்படி ஏற்பட்டது?

*பதில்:* சென்ற ஜனவரி 5இல் சிறுகதை ஆய்வரங்கை நடத்திமுடித்த காலப் பகுதிகளிலேயே அடுத்ததாக கவிதை ஆய்வரங்கு நடத்த முடிவு செய்தோம். காலகட்ட ரீதியாக பிரித்தே அதனை நடத்த முன்னர் திட்டமிட்டுப் பின்பே தனித்தனிக் கவிஞர்களின் படைப்புககளினூடாக ஆய்வரங்கை நடத்தத் தீர்மானித்தோம்.

*கேள்வி:* இலக்கியங்களைச் சிலர் சஞ்சிகைகளின் / பத்திரிகைகளின் சார்பாகப் பார்ப்பார்கள் பெரும்பாலானோர் காலகட்ட ரீதியாகப் பார்ப்பார்கள். நீங்கள் கவிஞர்கள் சார்பாக அவர்களது படைப்புக்கள் சார்பாகப் பார்க்கிறீர்கள் இது ஏன்?

*பதில்:* காலகட்ட ரீதியாக உள்ளடக்க ரீதியாக அல்லது நீங்கள் கேட்பது போல சஞ்சிகைகள் ரீதியாக ஆய்வை மேற்கொள்ளும்போது அவை சூத்திரப் பாங்காக, குறிப்பிட்ட படைப்புக்களை மட்டுமே விதந்துரைக்கின்ற நிலை ஏற்படுகின்றது. இதுவே நடைபெற்றும வருகின்றது. இதற்கு மாறாக எல்லாக் கவிஞர்களினதும் படைப்புக்களையும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இதுவே இன்றைய தேவையும் ஆகும்.

*கேள்வி:* நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களையும் சார்ந்த படைப்பாளிகள், ஆய்வாளர்களை இணைதது இந்த ஆய்வரங்கை ஏற்பாடு செய்துள்ளீர்கள்? இது எப்படிச் சாத்தியமாயிற்று? எதிர்கொண்ட அனுபவங்கள் எவை?

*பதில்:* இன்று எமது நாட்டில் நிலவுகின்ற சமாதானத்திற்கான யுத்த நிறுத்தச் சூழ்நிலையைப் பயன்படுத்த வேண்டும என்ற எண்ணமும் யுத்தத்தால் இங்கு வராதிருந்த படைப்பாளிகள், ஆய்வாளர்களை அழைத்து அவர்களின் கருத்துக்களை அறிய வேண்டும் எனும் உந்துதலும் இதற்கு காரணங்கள் எனலாம். சாத்தியப்பாடு எனும்போது ஒவ்வொரு ஆய்வாளர்களினதும் வீட்டுக்கதவுகளை நாங்கள் சென்று தட்டியதும் தேவையை உணர்ந்து அவர்கள் எமது கோரிக்கையை ஏற்றதுமே எனலாம்.

அனுபவம் என்பது பல்வகைத் தரத்தில் உள்ளது எனலாம். நெல்லு மூடை ஏற்றிய லொறியில் அம்பாறையில் இருந்து பாண்டிருப்பு போன பயண அனுபவம், சிங்களமொழி தெரியாத, ஆங்கில புலமை குறைந்த எமக்கு சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் பயணத்திற்கு வழிகாட்டி உதவிய அனுபவம், பல்வேறு படைப்பாளிகளை, ஆய்வாளர்களை சந்தித்ததும் தற்போதைய அவர்களின் நிலைப்பாடுகளை அறிந்த அனுபவம் என இது நீண்டு செல்லும்.

*கேள்வி:* இங்கே ஆய்வுக்கு உட்படுத்தும் கவிஞர்கள் முக்கியமானவர்கள் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால், பலர் விடுபட்டுள்ளனர் ஏன்?

*பதில்:* அறுபதுகளின் பின்னர் எழுச்சிபெற்ற படைப்பாளிகளையே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளோம். இதில பலர் தவறவிடப்பட்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. இதை வேண்டுமென்று செய்ததாக யாரும் கருதவேண்டாம். படைப்புக்களை பெறுவதில் உள்ள சிரமமே இதற்கு முக்கிய காரணம் ஆகும். ஆயினும், தவறவிடப்பட்டவர்களின் படைப்புக்களைத் தேடி எடுத்து மீண்டும் ஒரு கவிதை ஆய்வரங்கில் நிறைவு செய்வோம். ஈழத்துப் படைப்பாளிகளுக்கு முதன்மை கொடுத்து செயற்படுவதே எமது நோக்கம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

*கேள்வி:* அதைவிட ஓர் ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தும் கவிஞர்கள் காலகட்ட ரீதியாகவோ, அன்றி சார்ந்த தளத்திலோ கவிதைப் போக்கிலோ ஒத்த தன்மை கொண்டவர்களாக பெரும்பாலும் காணப்படவில்லை. இது தொடர்பான உங்களது கருத்து என்ன?


*பதில்:* கவிஞர்களை காலகட்ட ரீதியாகவோ, உள்ளடக்க ரீதியாகவோ அல்லது கவிதைப் போக்கின் ஒத்த தன்மையிலோ பாகுபடுத்தும் போது மேற்சொன்னதுபோல சூத்திரப் பாங்காய் அமையும். முரண்பட்ட தன்மைகொண்ட கவிஞர்களை ஓர் ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தும் போது உண்மையான சார்பில்லாத மதிப்பீடு வெளிவரும் எனக்கருதியே இவ்வாறான ஆய்வரங்கினை ஏற்பாடு செய்தோம்.

*கேள்வி:* நீங்கள் முன்னர் ஜனவரியில் நடத்திய சிறுகதை ஆய்வரங்கு ஏற்படுத்திய தாக்கம் வலியது. அதன் அனுபவங்கள் பயன்பாடு பற்றிக் கூறமுடியுமா?.

சிறுகதை ஆய்வரங்கக் கட்டுரைகள் இப்பொழுது அச்சில் உள்ளன. எமக்கு ஒத்துழைப்புச் செய்த ஆய்வாளர்கள் நன்றிக்குரியவர்கள். இவ்வாய்வரங்கில் பெற்ற அனுபவமும், அஸ்வகோஸ் போன்றவர்களின் சில கருத்துநிலைகளுமே கவிஞர் ரீதியான ஆய்வுக்கு இட்டுச் செல்கின்றது எனலாம். இளைய தலைமுறை கூடுதலாகப் பங்குபற்றியமையே இதன் பயன்பாடும் வெற்றியும் என்று சொல்லலாம்.

*கேள்வி:* தூண்டி இலக்கிய வட்டம் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகள் பாராட்டுக்குரியவை? எதிர்காலத்தில் என்னென்ன திட்டங்களை முன்வைக்க எண்ணியுள்ளீர்கள்?

*பதில்:* தொடர்ந்து வரும் காலப் பகுதியில் மீண்டும் 'தூண்டி' இதழை வெளிக்கொணர உள்ளோம். நவீன தமிழ் இலக்கியத்தில் பிறகூறுகளையும் (நாவல், விமர்சனம்....) ஆய்வு செய்யவேண்டும். ஓர் ஆய்வாளர் பல படைப்பாளிகளை ஆய்வு செய்யும் நிலையினின்றும் மாறி ஒரு படைப்பாளியின் படைப்புக்களை மூன்று ஆய்வாளர்களது ஆய்வுக்குட்படுத்தும ஆய்வரங்குகளை அமைக்கவேண்டும் என்பதும் எமது எதிர் காலத்திட்டமாகும். ※



தி.செல்வமனோகரன்

## கலைச்சுடர்

தயாரிப்பு:-சத்தியன்



செவ்வி கண்டவர்கள்
சத்தியன்
இயல்வாணன்

# பண்டத்தரிப்பு அபிவிருத்திக்கு ஆலோசனைக்குழு நியமனம்

சண்டிலிப்பாய்,ஜுன்3

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றி ஆராய்ந்து ஆலோசனை தெரிவிப்பதற்காக அபிவிருத்திக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானந்தன் மேற் கொண்ட முயற்சியால் பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் க.செல்வரத்தினம் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.


பண்டத்தரிப்பு பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய வீதிகள், ஒழுங்கைகள் புனரமைப்பு, வெள்ளம் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்கள் அமைத்தல், சாக்கடை வடிகால் அமைத்தல், மலசலகூடங்கள் நிறுவுதல் உட்பட மற்றும் பல வேலைத்திட்டங்கள் பற்றி இக்குழு ஆராய்வதுடன் துறைசார்ந்த அதிகாரிகளுடன் இது குறித்து தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# வருடாவருடம் பயன்தரக்கூடிய பசுந்தாட் பசளைத் தாவரங்கள்

பசிய தாவரங்களை அல்லது பசிய இலைகுழைகளை நிலத்துக்கு இடுவதே பசுந்தாட்பசளையாகும். பூவரசு, ஆவரசு, காவிளாய், எருக்கலை, வேம்பு, பனைஓலை, பாவட்டை, பன்னை, காட்டுச்சூரியகாந்தி, சணல் போன்ற பயிர்கள் எமது பகுதிகளில் கூடியளவு பாவனையிலுள்ளன. இவற்றை எமது தேவைகளுக்கு நாம் போதுமான அளவு பாவிப்பதில்லை. இவை போதுமானளவு இல்லாமையும் ஒரு குறைபாடாகும்.

பண்ணை வேலிகளாக பசுந்தாட் பசளை தரும் தாவரங்களை வளர்ப்பதன் மூலமும், தரிசு நிலங்களிலும், பனங்காணிகளிலும் வளர்ப்பதன் மூலமும் எமது தேவைகளைச் சமாளித்துக் கொள்ளலாம். வேலி மதிலாகக் கட்டப்பட்ட இடத்தில் உட்பக்கமாக இவற்றை வளர்த்துக் கொள்ளலாம். வரட்சியைத் தாங்கும் தன்மையுள்ள மேலே கூறப்பட்ட பசுந்தாட் பயிர்களை மழை காலத்தில் உற்பத்தியாக்கினால் கோடை காலத்தில் பராமரிப்பு இல்லாமலே வருடாவருடம் பயன் பெறலாம்.

## கமமும் புலமும்



குறிப்பாக காவிலாய் போன்ற செடிகளை உண்டாக்குவதனால் மேலதிக வருமானம் பெறலாம்.

வேறு இடங்களில் பசுந்தாட் பசளையை உண்டாக்கி பயிர் செய்யும் இடத்துக்குக் கொண்டு வந்து இடுவது போல் பயிர் செய்யும் நிலத்திலே நேரடியாகவே காவிளாய், சணல் போன்ற பயிர்களை உண்டாக்கி நிலத்தில் புதைப்பதன்மூலம் இரட்டிப்பு பயன் கிடைக்கும். இவை அவரைக் குடும்ப பயிர்களாக இருப்பதால் வளியிலுள்ள நைதரசனை நிலத்தில் பதிக்கும் தன்மையுடையன.

ஓர் ஏக்கரில் பசுந்தாட்பசளை பெறுவதற்கு 80கிலோ சணல் விதை விதைக்கப்படுகிறது. விதைத்து 50வீதம் பூக்கும்போது நிலத்தில் புதைப்பதன் மூலம் 135கிலோ அமோனியம் சல்பேற்றுக்கும் சமமான பசளை கிடைக்கிறது. புகையிலைக்கு சணல் ஒரு சிறந்த பசுந்தாட்பசளையாகும்.

*பசுந்தாட்பசளைகளைத் தெரிவு செய்யும்போது கவனிக்க வேண்டியவை:-*

◆கூடியளவு நைதரசனை கொடுக்கக்கூடிய பயிர்

◆குறைந்த வயதுள்ள பயிர்

◆விரைவில் வளரும் பயிர்

◆இலைகளைக் கூடுதலாகக் கொண்ட பயிர்

◆விரைவில் சிதைவடையும் பயிர்

◆வரட்சியை தாங்கி எந்த மண்ணிலும் வளரும் பயிர்

*பசுந்தாட்பசளை இடுதலில் உள்ள பிரச்சினைகள்:-*

★அதிகளவு தேவையாகையால் ஏற்றி இறக்கல் சிரமம்.

★பயிர் நடமுன் தாக்க வேண்டும்.

★நைதரசனுக்கு தற்காலிக தட்டுப்பாடு ஏற்படும்.

★அவசியமான மூலகங்களை குறைந்தளவில் கொண்டிருத்தல்.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை பனை ஓலை சிறந்த பசுந்தாட் பசளையாகும். விரைவில் சிதைவடைவதற்காக வீடு பேய்ந்த ஓலைகளையும் நிலத்துக்கு இடுவார்கள். மண்ணில் ஏற்படாத நிலையிலுள்ள சேதனப்பொருள்களை பயிர்கள் எடுக்கும் நிலைக்குக் கொண்டுவரும். கழே உள்ள மண்போசனைப்பொருள்கள் மேலே வருவதுடன் களைகளும் கட்டுப்படுத்தப்படுகிறது. சில இடங்களில் பனை ஓலையால் பத்திரக்கலவையாக நிலத்தை மூடி வைத்திருப்பதன் மூலம் களை முளைக்காது இருப்பதுடன் மண்வளம் பாதுகாக்கப்படுகிறது.

கிளிசெறியா எனப்படும் சீமைக் கிழுவை ஒரு சிறந்த பசுந்தாட்பசளையாகும். ஆயினும், கூடியளவில் கால் நடை தீவனமாகப் பாவிக்கப்படுகிறது.

500கிலோ கிறிசெவறியாரிலிருந்து 13கிலோ யூரியா, 4கிலோ சுப்பர் பொஸ்பேற்று 6கிலோ பொட்டாசுக்கு சமமான பசளையைப் பெறலாம். தென்னந் தோட்டங்களின் வேலிகளில் கிளிசெறியாவை வளர்த்து வேறு பசளை பாவிக்காமல் இதை மட்டும் பாவிக்கமுடியும். ஒருஏக்கர் வேலியில 400 கிளிசெறியா மரங்களை உண்டாக்கலாம். பெருந்தோட்டங்களில் நிழலுக்காக வளர்க்கப்படும் கிளிசெறியா பசுந்தாட்பசளையாக பயன்படுத்தப்படுகிறது.

கிளிசெறியாவைப் போன்று இப்பில் இப்பிலையும் பயன்படுத்தலாம்.

வேப்பம் குழையும் கூடியளவு நைதரசனைக் கொண்ட பசுந்தாட்பசளையாகும் புகையிலைக்கு கசப்புத் தன்மையைக் கொடுக்கும் என்ற காரணத்தால் இடுவதில்லை. மற்றைய பயிர்களுக்கு பசுந்தாட்பசளையாக பாவிக்கலாம். நிலத்திலுள்ள பீடைகளை அழிக்கும் வல்லமை வேம்புக்கு உண்டு.

*நெல் வயலுக்கு பசுந்தாட் பசளை இடல்:-*

நெல் விதைப்பதற்கு $1\frac{1}{2}$ - 3 மாதத்திற்கு முன்பே பசுந்தாட் பசளையை மண்ணுடன் சேர்த்துவிட வேண்டும். சேற்றுநில வயல்களுக்கு பசுந்தாட்பசளை இடக்கூடாது. சேற்று நிலத்தில் பசுந்தாட்பசளை இடும்போது காற்றின்றிய சுவாசத்தால் ஐதரசன் சல்பைட் போன்ற வாயு உண்டாகி பயிருக்கு நச்சுத்தன்மையைக் கொடுக்கும். பிறவுன்சிங் போன்ற நோய்கள் உண்டாகும். ●

## ~விக்ரர்~



பாடசாலைகளில் இருந்து இடையே விலகிய சிறுவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கத்தில் அத்தகைய 164 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.சுகவாழ்வு நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சிறுமி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்பிதா கு.டேமியனும் படத்தில் உள்ளார்.

பி.பி.ஸி. செய்தியாளர் திருமதி பிரான்ஸிஸ் ஹறிசன் இதற்கு நிதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் மீன்பிடித் தொழில்நுட்பப் பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பயிற்சியை முடித்த ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-51)

உ

## வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

# சப்த தள இராஜகோபுர அடிக்கல் நடும் விழா

அம்பிகை அடியார்களே!

நிகழும் சுபானு வருடம் வைகாசி மாதம் 21ஆம் நாள புதன்கிழமை (04-06-2003) அதிகாலை 3மணியளவில் அம்பிகைக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று காலை 7.30மணி தொடக்கம் 8மணிவரையுள்ள சுபவேளையில் இராஜகோபுர அடிக்கல் நடும் வைபவம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வேலணை. (18696) - இராஜகோபுர திருப்பணிச் சபை

## கல்வயலில் வெள்ளியன்று அமுக்கவெடி மீட்பு

தென்மராட்சி,ஜூன்3

சாவகச்சேரி, கல்வயல் சண்முகாநந்தா பாடசாலை முன்பாக அமுக்க வெடி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

பாடசாலை முன்பாக உள்ள காணியொன்றில் காணப்பட்ட ஷெல்கள் மற்றும் வெடி பொருள்களை மீட்க வந்த 'ஹலோ ட்ரஸ்ட்' கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் அமுக்க வெடியினைக் கண்டுபிடித்து மீட்டெடுத்தனர்.

இந்தக் காணி துப்புரவு செய்யப்பட்ட பின்னர் மாணவர்கள் இந்த காணிக்குள் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. (எ-117)

## திட்டமிடல் அதிகாரிகளுக்கு திருமலையில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்3

வடக்கு- கிழக்கில் பணிபுரியும் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்கள், உதவிப்பணிப்பாளர்கள் ஆகியோரின் செயலாற்றுகைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வதிவிடச் செயலமர்வு இன்று முதல் மூன்று தினங்கள் திருகோணமலை உப்புவெளி விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு திட்டமிடல் செயலக கொள்கை அபிவிருத்தி அமைச்சு, 'நீர்ப்' திட்டம் ஆகியன இணைந்து இந்தச் செயலமர்வை ஒழுங்கு செய்துள்ளன. மாகாணசபை உயர் அதிகாரிகளும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மற்றும் வன்னி புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர்களும் இந்தச் செயலமர்வில் கருத்துரை வழங்குவர்.

கொள்கை வகுப்பு, திட்டமிடல், நிதி, தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

மாகாண திட்டமிடல் பிரதி பிரதம செயலாளர் வி.செ.சுவாமிநாதன் செயலமர்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (எ-3)

## தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ. நடத்தும் இலவச தையல் மற்றும் மனையியல் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற மாணவிகளின் உற்பத்தி பொருள்களின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு-கீரிமலை வீதியிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் ஆ.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக இலங்கைத் தேசிய வை.எம்.சி.ஏயின் பொதுச்செயலாளர் கிரிசாந்தா ஹெற்றி ஆராய்ச்சி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண வை.எம்.சி.ஏ. ஒன்றியத் தலைவர் எஸ்.ஏ.அருமைநாயகம், தென்னிந்திய திருச்சபையின் பண்டத்தரிப்பு முகாமைக்குரு அருட்திரு. சொலமன் மில்ரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர். (எ-135)

## பஸ்சேவை நீடிப்பு

கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி ஊடாக சுன்னாகத்துக்குச் செல்லும் பஸ் சேவை சங்கானை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தினமும் பி.ப. 3 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்படும் பஸ் சேவையே நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### தேவை

வெல்டிங் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புவர்களும் தேவை.

தொடர்பு

தக்ஷிகா

வெல்டிங் வேக்ஸ்

இல 21, பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

(18702)

### வைத்திய சேவை

வடலியடைப்பு சுப்பிரமணியம் வைத்திய சேவை வடலியடைப்பு பிள்ளையார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற தென்பதை வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(18691) தகவல் க.சந்தராசா

உ

சிவமயம்



*மணித்தீபமெனும் நயினா தீவுதனி*
*வாரியதில் மகிழ்ந்து கோயில்*
*பிணிப்பிறவியறுப்பதற்காக கொண்டுயரும்*
*அரவணிந்த பெரியாள் வாழி*
*கனித்திதுவே பேரறமென் றன்னதானம்*
*செய்யும் கருத்தோர் வாழி*
*அனித்தெனவே யார்க்கு மனம் தரும் அமுத*
*சுரபியில்லம் கலந்து வாழி*

-அறிஞர் கி.வா.ஜகந்நாதன்
கலைமகள்,
தமிழ்நாடு-இந்தியா-1972

## நயினாதீவு-ஸ்ரீ நாகபூசணி

# அமுதசுரபி அன்னதான சபை

**2003 ஆரம்பம் - 1960(வரைவுள்ளது) 2003**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இந்த ஆண்டுடன் 44ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையென கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப்பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப் பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலிய வற்றை மனமுவந்து உதவிவரும தரும சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த ஆண்டு ஆனி மாதம் 15ஆம் நாள் (29-06-2003) ஞாயிற்றுக்கிழமை அம்பாளின் மகோற்சவம் (திருவிழா) ஆரம்பமாகி ஆனி மாதம் 28ஆம் நாள் (12-07-2003) சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஆனி மாதம் 29ஆம் நாள் (13-07-2003) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 15நாள்களும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப் பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றை கொடுத்து சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பணிவுடன்

கு.சாந்தலிங்கம்-கௌரவ செயலாளர்

அமுதசுரபி மண்டபம்

(C/28212) நயினாதீவு - J2



அனலையம்பதி

## ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி (நாச்சிமார்) அம்பாள் திருக்கோவில்

### மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

### உபய் திருவிழா

அம்பிகை அடியார்களே!

திருவருள் செல்வம் நிறைந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் தென்மேற்குப் பகுதியில் அனலையம்பதி என்னும் திவ்விய சேஷத்திரத்தின் மத்தியில் எழுவடிவிலில் உருவத்திருமேனி கொண்டு திவ்விய மந்திர சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி (நாச்சிமார்) அம்பாளுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சுபானு வருஷம் வைகாசி மாதம் 22ஆம் நாள்(05.06.2003) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) தொடர்ந்து 10 தினங்கள் மகோற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து திருத்தொண்டுகள் புரிந்து அம்பாளின் திருவருளை பெறுவீர்களாக.

திருவிழா நிகழ்வுகள்

- ★ 04.06.2003 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு மஹோற்சவ பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
- ★ 05.06.2003 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்)
- ★ 10.6.2003 செவ்வாய்க்கிழமை மாலை மஞ்சத் திருவிழா
- ★ 11.06.2003 புதன்கிழமை மாலை வேட்டைத்திருவிழா
- ★ 12.06.2003 வியாழக்கிழமை மாலை சப்பரத் திருவிழா
- ★ 13.06.2003 வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழா
- ★ 14.06.2003 சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழா மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்)
- ★ 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகம மாலை வைரவர் சாந்தி பூஜை

**அடியார்கள் அனைவரும் வருக! அம்பிகை அருள் பெறுக!!**

அனலைதீவு. (18598) அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை அம்பாள் திருக்கோயில் அறங்காவலர் சபை

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் களஞ்சியக் காப்பாளராகக் கடமையாற்றும் **திரு.க.குணலிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மாணிக்கம் கந்தையா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (18703)

பணிப்பாளர், அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி சி.சுதர்சினி அவர்களின் அன்புத் தந்தையார்

### வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(C/28215) - வடமராட்சி நண்பர்கள்

# மரண அறிவித்தல்கள்

## வினாசித்தம்பி செல்வநாதன்

(லக்ஷ்மி மோட்டோர் வேர்க்ஸ்,
முதலாம்குறுக்குத்தெரு,பருத்தித்துறை)

பருத்தித்துறையைச் சேர்ந்த வினாசித்தம்பி செல்வநாதன்(லக்ஷ்மி மோட்டோர் வேர்க்ஸ், முதலாம் குறுக்குத் தெரு,பருத்தித்துறை) அவர்கள் 30.05.2003 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் குணரூபினி அவர்களின் அன்புக் கணவரும் செல்வினி, சுபோதினி, திலக் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி தம்பதிகளின் இளையமகனும் திருமதி வள்ளிநாயகி முருகுப்பிள்ளை, திருமதி தெய்வநாயகி இரத்தினசிங்கம், காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான குணநாயகம் (ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி குணமணி இரத்தினம் (இளைப்பாறிய உதவி அதிபர்), திருமதி குணவதி தவரட்ணம் (இளைப்பாறிய அதிபர்), வைத்திய கலாநிதிகள் குணபாலன், குணசெல்வம் மற்றும் காலஞ்சென்ற எட்வார்ட் குணசீலன்(கணக்காளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி விருப்பப்படி அவரது பூதவுடல் ஜேர்மன் வைத்தியசாலைக்கே கொடுக்கப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன்கோயிலடி, பருத்தித்துறை.* (18697)

தகவல்: சு.பாலசுப்பிரமணியம், *(உதவிப்பொது முகாமையாளர் இலங்கை வங்கி)*

## திருமதி ஞானேஸ்வரி செல்லையா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி செல்லையா அவர்கள் 29.05.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா அவர்களின் பாசமிகு மனைவியும் ஈஸ்வரி (வசந்திரா- பிரான்ஸ்), காலஞ்சென்ற நிர்மலாதேவி, திலகவதி, மகேந்திரன்(லண்டன்), அமலேந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கராசா (பிரான்ஸ்), கிருஷாந்தி (லண்டன்), ஜெசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விஜி (ஆசிரியை, கொழும்பு இந்து மகளிர் கல்லூரி), பிரியா (பிரான்ஸ்), இளங்கீரன் (பிரான்ஸ்), நிலக்ஷி (லண்டன்), ஷேகா (லண்டன்), அஜந்தன் (பிரான்ஸ்), பிரபா (உரிமையாளர், நியூ ரேடியம்ஸ் ஸ்தாபனம், ரேகவா நிறுவனம், (கொழும்பு), செல்வன் (இயல்வாணன் பத்திரிகை ஆசிரியர்- பிரான்ஸ்), சுகி (பிரான்ஸ்) ஆகியோரின அன்புப் பேர்த்தியும் அக்ஷினி, மௌனீஷன், நிம்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2003) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.2, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.* (18704) தகவல் த.திலகவதி(மகள்)

# இங்கு நடக்கும் தேசிய விளையாட்டு விழா சமாதானத்தின் ஒரு வகைப்பங்களிப்பே!

## காணியமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவிப்பு



யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த தேசியவிளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடலில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன (வலது) உரையாற்றுகின்றார். அருகில் மாவை சேனாதிராஜா எம்.பி. (மத்தி), யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (படம்: தேவா)

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்குடாநாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவும் சமாதானத்தின் ஒரு வகைப் பங்களிப்பே யாகும்

- இவ்வாறு தெரிவித்தார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செபரெம்பர் மாதம் நடத்தப்படவுள்ள வடக்கு - தெற்கு சமாதான தேசிய விளையாட்டு விழா தொடர்பாக ஆராயவதற்கென யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன, அவை பற்றித்தான் நான் கூறினேன்.

கடந்த கால யுத்தத்தில் இங்கு அழிவுற்ற மற்றும் சேதமடைந்த இடங்களை பார்த்ததும் பெரிதும் அதிர்சியடைந்தவன் நான்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இங்கு உருவாகிய அரசியல் தலைவர்களின் சிறுமைத்தனமான செயல்களால்தான் நாட்டில் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இன்று அந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் பேச்சு மூலமே தீர்க்க வேண்டுமென அனைவரும் உணர்ந்துள்ளனர்.

தேசிய விளையாட்டு விழா தொடர்பாக என்னைச் சந்தித்துப் பேசிய விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், வடகுக் கிழக்கு மக்களின் எத்தனையோ அத்தியாவசியப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கும் போது யாழ்ப்பாணத்தில் எவ்வாறு விளையாட்டு விழாவை நடத்தவுள்ளீர்கள் என்று கேட்டார்கள். இதுவும் சமாதானத்துக்கான ஒரு பங்களிப்பே என்று அவர்களுக்கு எடுத்துக்கூறினேன்.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடன் இரண்டரை மணி நேரம் கலந்துரையாடினேன். அவற்றை விரைவில் தீர்ப்பதற்காகவும் என்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் புலிகளின் பிரமுகர்களுக்கு உறுதியளித்தேன்.

இந்த விளையாட்டு விழாவிற்கு அவர்கள் தமது ஆதரவை வழங்குவதுடன் அவர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பிப்பார்கள் எனவும் எதிர்பார்க்கிறேன்.

வடக்கில் உள்ள மக்களுக்கும் தெற்கில் உள்ள மக்களுக்கும் பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்படாத வரைக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இது போன்ற சமாதான விளையாட்டு விழாக்கள் மூலம் இருபகுதி மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த நாம் விரும்புகிறோம். அதன் ஒரு பகுதி தான் இந்த விளையாட்டு விழா.

எமது பிரதமர் சமாதானத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளார். சமாதானம் பற்றி எவர் சந்தேகப்பட்டாலும கூட பிரதமர் நிலையான, உறுதியான நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றார் - என்றார்.

(ம-8-10)

## அர்த்தமில்லை

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள வீடுகளில் எமது மக்களை மீளக்குடியமர அனுமதிக்காத வரையில் தேசிய விளையாட்டு விழாவினை யாழ்ப்பாணத்தில் நடத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

- இவ்வாறு தெரிவித்தார் மாவை சேனாதிராஜா எம்.பி. யாழ்.செயலகத்தில் நடந்த தேசிய விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மிகவும் வளம்மிக்க நிலமான வலி.வடக்குப்பிரதேசத்தில் பெரும் அளவிலான பயிர்ச்செய்கை நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.அங்கு வாழ்ந்த மக்கள் பல வருடங்களாகவும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றைத் தீர்ப்பதற்கு முதலில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்3

வளவை வளவனின் தேசத்தின் பாடல்கள் எனும் சிறுகதை நூல் அறிமுக விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் செம்பியன் செல்வன் தலைமையுரையினையும், பொன் கணேசமூர்த்தி அறிமுகவுரையினையும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சிறப்புரையினையும் கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோா நூலின் ஆய்வுரையினையும் நிகழ்த்துவர். (எ-ரி)

## புனரமைப்புக்கு உலக வங்கி நிதி உதவி

கொழும்பு,ஜூன்3

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிபபடைந்த பகுதிகளின் புனரமைப்புக்காக உலக வங்கி ஐந்து கோடி ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகவே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக வங்கியின் உதவியுடன் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் -

அதன் ஆரம்ப கட்டமாகவே இந்த ஐந்து கோடி ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்3

சிறுப்பிட்டி மேற்கு பெருதலை சிவன் ஆலய இந்து கலைக் களஞ்சிய திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

சிவன்கோவில் நிர்வாகக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெறும இந் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ம-ரி)

## சமாதானச் சூழல் தொடர்வதை அடுத்து எம்.எஸ்.எவ். மருத்துவக் குழு சேவையை நிறுத்திப் புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வைத்தியசாலைகளில் பணிபுரிந்த எம்.எஸ்.எவ். பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படுகின்றனர்.

யுத்த காலத்தில் அவசர வைத்தியப்பணிகளை மேற்கொள்வதற்காக 1989 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பணிபுரிந்த இந்தப்பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் தமது பணிகளை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறுத்துகின்றனர்.

பருத்தித்துறை, மந்திகை வைத்திய சாலையில் நாளை நடக்கவிருக்கும் பிரிவுபசார வைபவத்துடன் அங்கிருந்து புறப்படும் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் அவர்களது யாழ்.அலுவலகத்தில் 14 ஆம் திகதி வரை தங்கியிருப்பர். 15 ஆம் திகதி யாழ்அலுவலகத்தையும் மூடிவிட்டு கொழும்புக்கு செல்லவிருக்கின்றனர்.

யுத்த காலத்தில் அவசர பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை வந்த தாங்கள், தற்போதைய சமாதான சூழ்நிலையை அடுத்து தமது பணிகயை முடிவுக்கு கொண்டுவருவதாகவும் -

தமது சேவை இங்கு தேவைப்படும் பட்சத்தில் தாம் மீண்டும் வருவோம் என்றும் -

இந்த அமைப்பின் அதிகாரி தெரிவித்தார். (ம-3)

## நவீன வசதிகள் கொண்ட கால்நடை வைத்தியசாலை

### திருநெல்வேலியில் அமையும்

யாழ்ப்பாணம்,ஜூன்3

திருநெல்வேலியில் 90 லட்சம் ரூபா செலவில் கால்நடை வைத்திய சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

'நிக்கோட்' திட்டத்தின் கீழ் இந்த வைத்தியசாலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டியில் அமைந்துள்ள கால்நடை வைத்தியசாலையைப் போன்று நவீன வசதிகள் கொண்டதாக இந்த வைத்தியசாலை அமையும்.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகாமையில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் இந்த வைத்தியசாலை நிறுவப்படும்.

நவீன வசதிகளுடன் இலங்கையில் நிறுவப்படும் இரண்டாவது வைத்திய சாலை இதுவாகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)

## வெடிபொருள்கள் செயலிழப்பு

தென்மராட்சி,ஜூன்3

சாவகச்சேரி நீதிமன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள்கள் கடந்த சனியன்று காலை தனங்கிளப்புப் பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டன.

சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் வழங்கப்பட்ட வெடிப்பொருள்கள் நீதிவானின் பணிப்புரைக்கமைய, பொலீஸாரின் முன்னிலையில் படையினர் செயலிழக்கச்செய்தனர்.

இவை வெடித்த இடத்திலிருந்து பெரும் புகைமண்டலம் எழும்பியதை காணமுடிந்ததுடன்,வெடித்த சத்தம் சாவகச்சேரி நகர்ப்பகுதியை அதிரவைத்தது. (எ-117)

## மரண அறிவித்தல்

### தம்பு நாகராசா

(இளைப்பாறிய தபாலக ஊழியர், கைதடி)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நாகராசா நேற்று (02.06.2003) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - பொன்னி தம்பதியரின் புதல்வரும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குருபரன் மற்றும் தயாளன் (சுவிஸ்), அருணன்(தபாலகம், கைதடி), அகிலன் (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் குகதர்சினி(சுவிஸ்), நிர்மலவேணி ஆகியோரின் மாமனாரும்,கீர்த்திகாவின் பேரனும் காலஞ்சென்ற முருகேசு-முருகேசு மாசிலாமணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது கைதடி இல்லத்தில் நாளை (04.06.2003) புதன்கிழமை 11 மணியளவில் நடைபெற்றுபூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.*

(c/2.8219)

## வலிகாம வலயமட்ட விளையாட்டு முடிவுகள்

வலி.தெற்கு,ஜூன்3

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே உடற்பயிற்சி, மென்பந்து, சதுரங்கம், உதைபந்து, வலைப்பந்து மற்றும் கரபந்தாட்டம் போன்ற விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளின் விவரம் முறையே வருமாறு:-

உடற்பயிற்சிப் போட்டியின் 19 வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, நவாலி மகாவித்தியாலயம் ஆகியவற்றுடன் மூன்றாம் இடத்தைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகியனவும் பெறுகின்றன.

15 வயதுப் பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, சங்கானை சிவப்பிரகாசர் மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி ஆகியன பெறுகின்றன.

உதைபந்தாட்டப்போட்டியின் 19 வயதுப் பிரிவில் கந்தரோடை ஸ்கந்த வரோதயக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

வலைப் பந்தாட்டப் போட்டியின் 15 வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும், 19 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கரபந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் 19 வயதுப் பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன.

மென்பந்தாட்டத்தின் 19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிமுதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மென்பந்துத் துடுப்பாட்டத்தில் 19 வயது பிரிவில் மகாஜனக்கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகியன தெரிவுசெய்யப்பட்டன.

சதுரங்கப் போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி,தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கலலூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன. 15வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி,உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகியனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## மத்திய மாகாண புதிய முதலமைச்சர்

மத்திய மாகாணத்தில் புதிய முதலமைச்சராக வசந்த அலுவிகார பதவியேற்கவிருக்கிறார். நாளை மறுதினம் 5 ஆம் திகதி அவர் மாகாண ஆளுநர் மொண்டி கொபல்லாவ முன்னிலையில சத்தியப்பிரமாணம் செய்வார் எனத் தெரிகிறது.

முதலமைச்சராக இருந்த டபிள்யூ. பி.திஸநாயக்க காலமானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வசந்த அலுவிகார நியமிக்கப்படவிருக்கிறார்.

## தேசிய எழுச்சிப் பேரவை கிராமம் தோறும் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்3

தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் கிராம ரீதியாக தேசிய எழுச்சிப் பேரவை அமைக்கப்பட்டு வருகின்றது.

சமூகக்கட்டுமானம், பண்பாட்டுத்தளம் என்பவற்றைப் பேணுவதும் அரசியல் விழிப்புணர்ச்சி, கல்வி மற்றும் கிராம அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்படுவதும் இந்த அமைப்பின் பணியெனத் தெரிவிக்கப்பட்டது.

அமைப்புக்கான பிரதிநிதிகள் கிராமிய மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர். தொடர்ந்து இவர்களின் பணி மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திற்கு விரிவுபடுத்தப்படும். தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட ரீதியிலான ஒன்றுகூடல் இம்மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## திருமலை மாணவி மயூரணி கொலையில்

# குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் ஆனால் என்மகன் கொலைகாரன் அல்லன்

## பாலபிரசன்னாவின் தந்தை தெரிவிப்பு

திருகோணமலை,ஜூன்3

திருமலை மாணவி மயூரணியைக் கொலை செய்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவேண்டும். ஆனால், எனது மகன் பாலபிரசன்னா கொலைகாரனல்லன் அவன் நிரபராதி என்கிறார் பாலபிரசன்னாவின் தந்தை சிவகுமார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி மதுரையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த மாணவி மயூரணியின் கொலை தொடர்பாக மதுரைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கும் திருமலை மாணவன் பாலபிரசன்னாவின் தந்தை மதுரைக்குச் சென்றுவிட்டு சில தினங்களுக்கு முன்னர் இலங்கை திரும்பினார்.

அவரது மகன் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் கொலை தொடர்பாக அவர் பல திடுக்கிடும் தகவல்களைக் கூறியுள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்துக்குள் தனது மகனைப் பற்றி பல தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன. என்றும் அதற்கு ஆதாரம் இல்லை என்றும் கூறிய சிவகுமார் தனது மகன் குற்றவாளி அல்லன் என்பதற்கான ஆதாரங்கள் நிறைய உள்ளன என்றும் கூறினார்.

திருமலையில் பிரபல டாக்டர் ஒருவரின் மகளின் கைகளை எனது மகன் வெட்டவில்லை. அங்கு நடந்த சம்பவம் மற்றும் இழுபறியில்தான் கரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

மயூரணி கொலை சம்பவம் பற்றி அவர் கூறியதாவது:-

மதுரையில் மயூரணி கொலை செய்யப்பட்ட தினத்தன்று பாலபிரசன்னாவின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போதே அவன் குற்றம் புரிந்ததற்கான வாய்ப்பு இருக்கவில்லை என்பது தெரிகிறது. சம்பவம் இடம்பெற்ற செவ்வாய்க்கிழமை பகல் மதியபோசனம் அவன் தங்கியிருந்த வீட்டில் கிடைக்கவில்லை. அதனால் அதனைக் கேட்பதற்காக மேல் மாடியிலிருந்து கீழே வந்துள்ளான். பிரசன்னா வரும் வழியில் மயூரணியிருந்த அறைக்கதவை தட்டி தனது அப்பா இன்னும் ஓரிரு தினங்களில் வந்துவிடுவார் என்று சொல்லியிருக்கிறான்.

இது பற்றி மயூரணி பாலபிரசன்னாவிடம் ஏற்கனவே கேட்டிருந்ததால் தகவலை அவன் சொல்லியிருக்கிறான்.

இந்த வேளையில்தான் மயூரணி இலங்கையிலிருந்த தனது சகோதரியுடன் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தாள். கதவைத் தட்டிய பிரசன்னா சொன்ன செய்தியை நிச்சயம் மயூரணி தொலைபேசி உரையாடல் மூலமாக சகோதரிக்கு சொல்லியிருப்பாள். இங்குதான் வினை ஆரம்பமாகியது.

பிரசன்னா மயூரணியுடன் கதைத்த பின்னர், வேலைக்காரன் வீரணன் விடுமுறை என்பதை அறிந்து வெளியில் சாப்பிடச் சென்றான். அப்படியே மனசெல்லாம் படம் பார்த்துவிட்டு இரவு 9.30 மணிஅளவில் அறையில் தூங்கச் சென்றுள்ளான்.

மறுநாள் நண்பர் ஒருவருடன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்றுள்ளான். இவ்வாறு பாலபிரசன்னாவின் நடத்தையில் எந்த வித பதற்றமும் இருக்கவில்லை.

அதேவேளை, பாலபிரசன்னா மயூரணியிடம் திருடிய கணினியை வைத்திருந்தான் என்று கூறப்படும் அரவிந்தன் மற்றும் அவனின் நண்பர்கள் மீதுள்ள சந்தேகம் பற்றி பொலீஸாரிடம் முறையிடப்பட்டதற்கு பொலீஸார் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. அதை அலட்சியம் செய்துவிட்டனர். சிறிய சந்தேகக்காரர்களை யெல்லாம் கைது செய்து விசாரித்து வரும் பொலீஸார் முக்கிய ஆதாரமான கணனி வைத்திருந்தவரை விசாரிக்காதது ஏன்?

இதைவிட வீரணன் ஐந்து நாள்களாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தான். அத்துடன், பிரசன்னாவின் இடக்கைப் பாவனை கொலை தொடர்பாக கைரேகை அடையாளமின்மை இரத்தக்கறை யாருடையது என்று தெரியாதது அடித்துப் பெறப்பட்ட வாக்குமூலம்.

பிரசன்னா தனது தாய்க்கு எழுதிய இறுதிக்கடிதம் என்பவற்றைப் பார்க்கும்போது பிரசன்னாதான் கொலைகாரன் என்று கூறமுடியாதுள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றாக வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கான கட்டமைப்பு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரேரித்தார். ஆனால் புலிகள் அதை அடியோடு நிராகரித்துவிட்டனர்.

இந்த நிலையிலேயே ஜூன் முதலாம் (நேற்று முன்தினம்) திகதியிட்டு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரதமர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

தாம் பிரேரித்த நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து மேலும் சில விளக்கங்களை அந்தக் கடிதத்தில் விவரித்துள்ள பிரதமர் அக்கட்டமைப்புக் குறித்து புலிகளுக்கு விளக்கமளிக்கவும், புலிகள் தரப்பு சந்தேகங்களை தெளிவுபடுத்தவும், அவர்களின் பதிலை அறிந்து கொள்ளவும் தக்க வகையில் அரசுப் பிரதிநிதிகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்படவேண்டும் எனத் தாம் கருதுகின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறு தனியான கடிதம் ஒன்றின் மூலம் நோர்வே வெளிவிவகார அமைச்சரைக் கோரியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு அவருக்குத் தாம் தனியான கடிதம் வரைந்துள்ளார் என்பதை மதியுரைஞர் பாலசிங்கத்துக்கு எழுதியுள்ள கடிதத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமரின் கோரிக்கையை ஏற்று உடனடிச் சந்திப்புக்கு புலிகள் இணங்குவார்களா? அத்தகைய சந்திப்பை அடுத்து முட்டுக்கட்டை நிலை அகற்றப்பட்டு டோக்கியோவில் நடக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்குப் புலிகள் செல்லும் நிலை ஏற்படுமா என்பதெல்லாம் தற்போதைய நிலையில் ஊகிக்க முடியாதனவாகவே உள்ளன.

எழுத்து மூலம் உறுதிகள், விளக்கங்கள் தருவதைத் தவிர்த்து, பேச்சு மூலம் விளக்கம், வியாக்கியானம் தருவதற்கு அரசுத் தரப்பில் எடுக்கப்படும் முயற்சி புலிகளைத் திருப்திப்படுத்துமா என்பதும் கேள்விக்குறியே.

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோரே பிரதமரைச் சந்தித்தனர்.

வடக்கு - கிழக்கு புனரமைப்பு பணிக்கென இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின இறுக்கமான நிலைப்பாடாகும். தங்களது கோரிக்கையும் அதுதான் என்று தமிழ்க் கூட்டமைப்பினர் பிரதமரிடம் வலியுறுத்தினர்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குக் குறைவாக எந்தவித தீர்வையும் விடுதலைப் புலிகள் ஏற்கமாட்டார்கள். இதுவே புலிகளின் உறுதியான நிலைப்பாடாகும் என்றும் கூட்டமைப்பினர் பிரதமரிடம் விளக்கியுள்ளனர். (ம-3)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இந்த சிமெந்து தொழிற்சாலையை புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்வதன் மூலம் குடநாட்டுக்கான சிமெந்து தேவையை பூர்த்தி செய்துகொள்வதுடன் பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் கிடைக்கச் செய்ய முடியும் என்று அவர் சொன்னார். (ம-4)

## முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும் கேணல் ரத்னாயக்காவுக்கும் இடையில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

11மணியளவில் அங்கு கண்டனக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. சிவாஜிலிங்கம் அக்கூட்டத்தில் பேசினார். 11.15மணியளவில் போராட்டம் முடிவுக்கு வந்தது.

அதன்பின்பே கேணல் ரத்னாயக்காவும் படையினரும் முகாமுக்குள் சென்றனர்.

மறியல் போராட்டம் ஆரம்பமாகும் முன்னரே கலகம் அடக்கும் பொலீஸார் உட்பட ஏராளமான பொலீஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். (ம-3-70-173)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளவு விளக்கத்தைக் கொண்டிராததாலேயே அந்த யோசனை குறித்து மேலும் விளங்கங்களை பிரதமர் வழங்க வேண்டியிருப்பதாக பிரதமரின் அலுவலக வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.


கலையகம்
ஆவரங்கால்,புத்தூர்
SPOKEN ENGLISH
With
GRAMMAR
By: BRITTO
ஆரம்பம்: 05.06.2003
வியாழன் 10 மணி
(18692)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH
With
Grammar
★By: BRITTO
ஆரம்பம்: 04.06.2003 WED.
(MON /WED) 3.00p.m.
(18682)

SUBRA (14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
AND
GRAMMAR
BY: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
03.06.2003 Tus.காலை8.00
(வழமையான வகுப்புகள்
Tus.Thu.8.00)
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாக்கிருஷ்ணன்
புதியபிரிவு 03.06.2003(Thu.9.00)
(வழமையான வகுப்புகள்
Tus.Thu.9.00-10.00)
(C28124)

வெற்றிகல்வி நிறுவனம்
147,கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
ENGLISH
SPOKEN AND GRAMMAR
BY.BRITTO
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
05.06.2003 வியாழன்
2.00p.m. (ப.தே.)
(Tue.,Thu., 2.00)
(18712)

NIRU TUITION CENTRE
KONDAVIL
A/L 2004 PAPER CLASS
CHEMISTRY
ஆரம்பம்: 4.06.2003
புதன் மாலை 4.00 மணி
திரு.N.மகேஸ்வரன்
(18708)

வல்வெட்டியில்... தூபி வீதியில்...
இணைய சேவைப் பூங்கா!
ISP COMMUNICATION
மீள் ஒழுங்கமைப்பின் பின்னான எமது கட்டண அறவீட்டு விவரம்
எல்லா நாடுகளுக்கும் ஒரே கட்டணம்
20/= 20/= 20/=
★ கனடா ★ லண்டன் ★ சுவிஸ்
★ பிரான்ஸ் ★ ஆஸ்திரேலியா ★ ஜேர்மன்
★ மலேசியா ★ நியு,சிலண்ட் ★ ஏனையவை
★ இந்தியா ➢40/= ★ கைத்தொலைபேசி ➢35/=
★ மத்தியகிழக்கு ★ சவுதி ➢40/= ★ ஏனையவை ➢50/=
மேலும
அன்றும் இன்றும் என்றும்
உள்வரும் அழைப்புகள் 2/=
உள்நாட்டு அழைப்புகள் 8/=
மட்டுமே
(18592)

இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்.
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(18050)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 07.06.2003 இற்கு முன் நேரில்

உயர்தர மாணவர்களுக்கான கலந்துரையாடல்
NEW SCIENCE CENTER (யாழ்நகர்)
இல் என்னிடம் பௌதிகவியல் கற்றுக்கொண்டிருக்கின்ற (2004,2005) மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று (03.06.2003) செவ்வாய் பி.ப. 4.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள நியூட்டன் உயர் கல்வி நிலையத்தில் (DMI அருகில்) நடைபெறும். சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
(18711)
ஆசிரியர்:மா. கருணாநிதி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.